Registered as a News paper in Sri Lanka    பக்கங்கள்: 06    விலை [redacted]

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஸ்ரீ வைகாசி 1 ஆம் உ    செவ்வாய்க்கிழமை    (15-05-1990)    ஹிஜ்ரி 1410    ஷவ்வா 19    ஓசை 86

## கனடா சென்றாலும் கொலைக் குற்றம் விடவில்லை


(முல்லைத்தீவு)

மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் மனைவியைக் கொலை செய்தவர் ஒருவர் கடந்த மாதம் கனடாவில் வைத்து கனேடிய பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

1987 மாச் மாதம் முள்ளியவளையைச் சேர்ந்த பொன்னம்பலம் செல்வகுமார் என்பவர் தமது இளம் மனைவியான அ. நகுலேஸ்வரியைக் காட்டுக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகக் கூறப்பட்டது. நகுலேஸ்வரி கொலை செய்யப்பட்ட சமயம் கருவுற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மனைவியின் கொலையைத் தொடர்ந்து அவர் தலைமறைவாகி இங்கிருந்து தப்பி கனடா சென்று வாழ்ந்து வந்தார்.

கனடாவிற்கு இறந்த மனைவியின் சகோதரரும் சென்றதையடுத்து அவர் கனேடிய பொலிஸில் இக் கொலை பற்றி புகார் (6ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் பிரான்ஸ் தலைநகரான பாரிஸ் நகரில் ஏற்பாடு செய்திருந்த மேதின விழாவின் காட்சிகள்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ். - அரசு பேச்சு விடுதலைப் புலிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் மத்தியில் இன்று நடைபெறவிருக்கும் பேச்சுக்கள் குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் பலத்த கண்டனம் தெரிவித்தன. இந்தப் பேச்சுக்கள் தமிழீழ மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும், புலிகள்-அரசு உறவுகள் இதனால் பாதிப்படையலாமெனவும் இவ்வட்டாரங்கள் கூறின.

''மக்கள்மத்தியில் ஆதரவை இழந்து மக்களால் ஒதுக்கப்பட்ட குழுக்களை அரசியல் அதிகார பீடத்தில் ஏற்ற இந்திய அரசு முயற்சி செய்து தோல்வி கண்டது. அதே தவறை இப்பொழுது சிங்கள அரசும் செய்வதுபோல தெரிகிறது. இதனால் எழும் பாரதூரமான விளைவுகளுக்கு சிறி லங்கா அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்'' என்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தவர் ஒருவர் குறிப்பிட்டார்.

''பிரேமதாசாவின் அரசு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் கடந்த ஒரு வருட காலமாகப் பேச்சுக்களை நடத்தி வருகிறது நீண்டகாலமாக இழுபட்டுவரும் பேச்சுக்கள் மூலம் தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை மாகாண சபையைக் கலைத்து புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் ஆறாவது சட்டத் திருத்தம் நீக்கப்பட வேண்டுமென்றும் நாம் விடுத்த நியாயமான கோரிக்கைகளையும் இலங்கை அரசு தட்டிக் கழித்து வருகிறது. அதேசமயம் இந்திய ஆக்கிரமிப்புக்கு துணை நின்று இந்திய அரசின் அடிவருடிகளாய்ச் செயற்பட்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு குழுவுடன் உத் (6ஆம் பக்கம் பார்க்க)

# விலைவாசி ஏற்றத்தை கட்டுப்படுத்த விடுதலைப் புலிகள் நடவடிக்கை

## பட்டப் பகலில் வீடு உடைத்து திருட்டு

(வவுனியா)

ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் பட்டப்பகல் நேரம் வீட்டை உடைத்து நகைகளும் பணமும் களவாடப் பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீது பழுவை ஏற்றாதீர் வர்த்தகர்களிடம் - மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் வரி அறவிடுகிறார்கள் எனக்கூறி பொருட்களின் விலைகளை கூட்டி மக்களை சுரண்டும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா



## இன்று ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைச்சர் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இன்று இலங்கை அமைச்சுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ். விற்குமிடையில் பாராளுமன்றக் சட்டடத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இலங்கை அரசின் சார்பில் பெருந்... சர் கிருபாகரன், போக்குவரத்து அமைச்சர் அபூபூசுப்பும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிய [redacted]

## ஆயுதம்தாங்கிய கொள்ளையரை

யம் இந்திய ஆக்கிரமிப்புக்கு துணை நின்று இந்திய அரசின் அடிவருடிகளாய்ச் செயற்பட்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு குழுவுடன் உத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் நடவடிக்கை

## மக்கள் மீது பழுவை ஏற்றாதீர் வர்த்தகர்களிடம்

- மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் வரி அறவிடுகிறார்கள் எனக்கூறி பொருட்களின் விலைகளை கூட்டி மக்களை சுரண்டும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று எச்சரிக்கை விடுத்தார். யாழ். மாவட்ட வர்த்தகசங்கப் பிரதிநிதிகள், மற்றும் தனிப்பட்ட வர்த்தகர்கள் மத்தியில் பேசிய திரு. மாத்தயா விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த புலிகள் இயக்கம் உடன் நடவடிக்கை எடுக்கும் எனவும் அறிவித்தார்.

இக் கூட்டம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு யாழ்மாவட்ட அரசியற் பொறுப்பாளர் டொமினிக் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், மாதிரி நிர்வாக மையப் பொறுப்பாளர் அருள் மாஸ்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்மாவட்டத்தின் சகல பகுதிகளில் இருந்தும் வர்த்தகர்களும், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்

எம்மால் வரி விதிக்கப்பட்ட பொருட்களுக்கு கூடியவரியும், வரிவிதிக்கப்படாத பொருட்களுக்கும் மக்களிடம் இருந்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதை பொதுமக்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)



## இன்று ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைச்சர் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இன்று இலங்கை அமைச்சுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ். விற்குமிடையில் பாராளுமன்றக் சட்டிடத்தில்நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இலங்கை அரசின் சார்பில் பெருந்தோட்ட அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னாவும், நீதியமைச்சர் சாகுல் ஹமீத்தும் பங்குபற்றுவார்கள் எனத் தெரிகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தரப்பில் இருந்து இப்பேச்சுவார்த்தையில் பாராளுமன்றஉறுப்பினர் பிரேமச்சந்திரன், யோகசங்கரி ஆகியோருடன் வடக்குக் கிழக்கு மாகாணசபை நிதியமைச்சர் கிருபாகரன், போக்குவரத்து அமைச்சர் அபுயூசுப்பும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிய வ[illegible]

## பட்டப் பகலில் வீடு உடைத்து திருட்டு

(வவுனியா)

ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் பட்டப்பகல் நேரம் வீட்டை உடைத்துநகைகளும் பணமும் களவாடப் பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம்தாங்கிய கொள்ளையரை நோக்கியேதுப்பாக்கிப்பிரயோகம்

- ஞானம்

கடந்த சனிக்கிழமை வவுனியாக் காட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சம்பவம் ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டியைநோக்கி விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது எனவும், வேறு இயக்கத்தினர் எவருடனும் சண்டை இடம்பெறவில்லை எனவும் வவுனியா நகரப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார்

மேலும் அவர் தெரிவிக்கையில்,

வீதிகளின் அருகில் அமைக்கப்பட்டுள்ள காவல் நிலைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளோடு பேசப்புறப்பட்ட தமிழக மீனவர்களுக்கு பொலிஸ் தடை!

(புதுடில்லி)

இராமேஸ்வரத்திலிருந்து தமிழக மீனவர் குழுவொன்று இலங்கை சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச தமிழ்நாட்டுப் பொலிஸ் தடை விதித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்த மீனவர் தூதுக்குழுவொன்றுஅனுப்பப்படும் என மீனவர் சங்கத் தலைவர்கள் முன்னதாகக்கூறி வந்தார்கள். தமிழக சட்டப் பேரவையிலும் இந்தப் பிரச்சினை வலுத்தது.

புலிகளுடன் பேச்சுநடாத்துவதற்குச் செல்வதற்காக மீனவர்கள் அனுமதிஎதுவும் கோரவில்லை எனமுதல்வர் கருணாநிதி அப்பொழுது பதிலளித்திருந்தார். அப்படி மீனவர் தூதுக்குழு எதுவும் இலங்கை செல்ல முடியாது. எனத்தடை விதித்து மீனவர் சங்கத்தலைவர் திரு. அருளானந்தனுக்கு பொலிஸார் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

தடைகள் மீறி எவரேனும் செல்ல முயன்றால், அதனால் கடுமையான விளைவுகள் ஏற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றம் இன்று கூடும்

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று கூடுகின்றது. இன்றைய கூட்டத்தில் பௌத்த சாசன சட்ட மூல விவாதத்தில் முன்னர் நடந்த விவாதப் பகுதியை ஹன்சாரிலிருந்து நீக்க வேண்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் குழு சிங்கப்பூர்பயணம்

(பருத்தித்துறை)

போக்குவரத்து சம்பந்தமான விசேட பயிற்சிகளை மேற்கொள்ள பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று சிங்கப்பூர் செல்லவுள்ளது.

தமிழரான இன்ஸ்பெக்டர் திரு டிலிப்குமார் செல்வ

(6ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபையின் வேலைகள் நிதி வந்தடையாததால் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஊராட்சி சபைகளின் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஒதுக்கப்பட்ட நிதி வந்தடையாததால் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலை பற்றி அவர் மேலும் விளக்குகையில் 1990ம் ஆண்டு முடிவுடன் முழு புனர்நிர்மான வேலைகளும் செய்து முடிக்கப்பட வேண்டும். என்ற நிபந்தனையுடன் 2350 லட்சம் ரூபா. கனேடிய நாட்டினால் வடபகுதிக்கு மட்டும் உதவியாக ஒதுக்கப்பட்டது. ஆனால் இதில் ஒரு சிறு பகுதியாகிய 250 லட்சம் ரூபாவைத் தவிர வேறு ஒரு சதம் கூட எமக்கு கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாண சபை தமது புனர்நிர்மான வேலைகள் சம்பந்தமாக உள்ளூராட்சி இலாகாக்கென ஒதுக்கிய நிதி 650லட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றூழியர்கள் மூவருக்கு மூன்று மாதம் சம்பளம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மஞ்சத்தொடுவாய் கனிஷ்ட தொழில் நுட்ப கல்லூரி சிற்றூழியர்கள் மூவருக்கு மூன்றுமாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. என புகார் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கல்லூரி சம்மாந்துறை தொழில் நுட்ப கல்லூரியின் இணைப்பு ஆகும்.

சம்பள கொடுப்பனவு விபரம் சம்மாந்துறை தொழில் நுட்ப கல்லூரி உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும். இதுவரை சம்பளம் வழங்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வாக்கு மூலம் அளிக்கும் நிலையில் கலா இல்லை

(கொழும்பு)

சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து இன்னமும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் திருமதி. கலா தம்பிமுத்து இன்னமும் நல்ல குணமடையவில்லை. சூட்டுச்சம்பவம்பற்றி அவருடைய வாக்குமூலத்தைப்பெறுவதற்கு பொலிஸார் முயற்சி செய்தாலும் வாக்குமூலம் கொடுக்கும் நிலையில் திருமதி கலாவின் உடல்நிலை இன்னமும் தேறவில்லை என்றுவைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள கனடா

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆறாவது திருத்தச் சட்ட நீக்கமும் அஷ்ரப்பும்!

### புலிகள் நிலைப்பற்றி கேட்கிறார்

(கொழும்பு)

வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள முஸ்லிம் மக்கள் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டுமென்றும் இதன் பின்னரே இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஆதரவளிப்பது பற்றி தாம் தமது முடிவைத் தெரிவிக்க முடியுமென்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம், எச். எம், அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததும்முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அறிக்கை விடுத்தார்,

ஆறாவது திருத்தம் நீக்கப்பட்டால் நாடு பல்வேறாக பிளவு பட்டுவிடும் என்று ஜனாப் அஷ்ரப் கூறினார்.

பின்னர் நிபந்தனையுடன் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இப்பொழுது விடுதலைப்புலிகள் வடக்குகிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் பற்றிய தமது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

## வட-கிழக்கு இணைப்புச் சபை மட்டுநகரில் கூடும்

### அரச அதிபர்களும் முதல் தடவை கூடுவர்

(கோட்டைமுனை)

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக் குழுக் கூட்டமும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அரசாங்க அதிபர்களின் கூட்டமும் முதல் தடவையாக மட்டக்களப்பில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு, ஆர். யோகநாதன் செய்து வருகிறார்.

இதுவரை திருக்கோணமலையில் நடைபெற்று வந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு நிதி உதவி வழங்க தயார்

### இலங்கை வங்கி முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

சுய தொழில் முயற்சி செய்யுமிளைஞர்களுக்கு இருபத்தையாயிரம் ரூபா வரையான கடன் வசதிகளை செய்து கொடுப்பதற்கு தாம்எந்நேரத்திலும் தயாராக உள்ளதாக இலங்கை வங்கியின் யாழ்ப்பாண கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தனியாகவோகூட்டாகவோ இருபத்தொரு வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் இக்கடன்களை பெற்றுக் கொள்ளலாம். தற்போது இளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

குமுதம் ரூ. 7.00 ஆனந்த விகடன் ரூ. 8.00, இந்திய ருடே தமிழ் ரூ. 22.00, ஞான பூமி ரூ. 20.00 ரத்தினபாலா (சிறுவர் சஞ்சிகை) ரூ. 9.50 கல்கிரூ.8.00மற்றும்அனைத்து சஞ்சிகைகளும் விலை குறைக்கப்பட்டுள்ளன. வியாபாரிகளுக்கு விற்பனை விலையில் இருந்து கழிவு வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்: பூபாலசிங்கம்புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கும் வில்லிசைக்குழுவொன்றிற்கு நகைச்சுவையாகப் பேசக் கூடிய பக்கப்பாட்டுக் கலைஞர் தேவை, தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும்.

முகவரி- V. K. காந்தன் 11 ஆம் வட்டாரம் புங்குடுதீவு.

(R.477)

### தேவை

ஸ்ரூடியோவில் றபர் சீல் வேலை செய்வதற்கும் பழகவும் ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. தரன் ஸ்ரூடியோ 9,8 நவீன சந்தை யாழ்ப்பாணம். போன்-23585

### விற்பனைக்கு

புலவர் கீரனின் இராமாய சொற்பொழிவு ஒலிப்பதிவு நாடாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு- சதீஸ்றெக்கோடிங் ஸ்ரூடியோ 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B-950)


## பயிற்சி நெறி முடித்த ஆசிரியர்க்கு சான்றிதழ்கள்

(சுண்டிக்குளி)

பாலர் பாடசாலைப்பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்த 37 ஆசிரியைகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதற்கு அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்தயுனிசெவ் அதிகாரிகள்பிரதமவிருந்தினர்களாகபங்குபற்றினர் இவ்வைபவத்திற்கு மாநகர சபை ஆணையாளர் வி.பி.பாலசிங்கம்சுகாதாரவைத்தியஅதிகாரி திருமதி கதிர்காமநாதன் ஆகி

## ஒரு மாத வேலையின் பின் சம்பளமின்றிவேலை நீக்கம்

(களுவாஞ்சிக்குடி)

மண்முனை தென் ஒருவில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு பெரியகல்லாற்றைச் சேர்ந்த ஒரு பெண் லிகிதரும். கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த ஒரு ஆண் லிகிதரும் வடக்கு கிழக்குமாகான சபையின் லிகிதர் நியமனம் பெற்று 1-0-90ல் இருந்து லிகிதர்களாக கருமமாற்றி வந்தார்கள்.

இவர்களை வேலை நீக்கம் செய்வதற்கான மாகாண அரசின் 24-04-90 திகதியிட்ட செயலாளரின் கடிதம் இவர்களுக்கு 30.04-90 கிடைத்தது. அதில் அவர்கள் 01-04-90ல் இருந்துவேலை நீக்கம் செய்யப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது குறித்து சம்பந்தப்பட்ட இருவருமே அதிர்ச்சியடைந்தனர்.

ஒரு மாதம் வேலை செய்த பின்னர் அந்த மாத தொடக்கத்திலேயே வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதால் அவர்களுக்கான அம்மாதச் சம்பளமும் வழங்கப்படவில்லை.

இருவரும் பிரயாண செலவு செய்தே கருமமாற்றி வந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மனிதாபிமான அடிப்படையில் அங்கு பணியாற்றிய நிரந்தர அலுவலக ஊழியர்கள் அவர்களின் பிரயாணச் செலவை ஈடுசெய்யும் வகையில் அன்பளிப்புச் செய்ததுடன் பிரிவுவசாரவைபவத்தையும் நடத்தினர்.

சம்பந்தப்பட்ட இருவரும் மாகாணசபை செயலாளரைச் சந்தித்து நீதி கேட்பதற்காக திருகோணமலை சென்றுள்ளனர். மாகாண சபை இவ்வாறு தான் செயல்படுகின்றதா? என இங்குள்ள மக்கள் கேட்கின்றனர். (45)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. சைவ சித்தாந்தத்தில் பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு)
2. உடலமைப்பியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்.
3. சட்ட மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர்
4. மகப் பேற்றியலும் மாதர் நோயியலும் / மன நோயியல் அறுவை மருத்துவத்தில் செய்முறை காட்டுநர்.
5. ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 111

உடற்கல்விப் பணிப்பாளர்:

குறிப்பு:

1. உடலமைப்பியல் சிரேஷ்[illegible] விரிவுரை[illegible]ம் 11 / விரிவுரையாளர் / உதவிவிரிவுரையாளர்

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/– மாதம் ஒன்றுக்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு.

செய்முறை கட்டுநர்: ரூபா 3,250/– மாதம் ஒன்றுக்கு.

பேதனாசிரியர் தரம் 111: ரூபா 3,000 - 6 X 80 - 3,480/- (மாதமொன்றுக்கு)

உடற்கல்விப் பணிப்பாளர்: ரூபா 6,000 –100 X 200- 8,000/- (வினைத் திறமைகாண் தடை) ரூபா 8,250 - 7 X 250 - 10,000/- (மாதமொன்றுக்கு)

பேராசிரியர் பதவிக்கு (அரக்கொடைத்தவிசு) விண்ணப்ப முடிவுத்திகதி 1990ஆகஸ்ட் 7ஆம் திகதி ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1990 ஜூன் 08ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பங்கள் இப் பல்கலைக்கழத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக்கொடைத்தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/-


## இந்திய இராணுவ நடவடிக்கையின்போது செல்வி ஜக்குலின் துணிவுடன் செயற்பட்டார்

### பேராசிரியர் கணேசலிங்கம் பாராட்டு

(பருத்தித்துறை)

பிரான்ஸ் தேசத்திலிருந்து வடமராட்சிக்கு வந்து தமிழ் மக்களுக்கு இக்கட்டான சூழ்நிலைகளிலே அரும் பெரும் வைத்திய சேவைகளை வழங்கிய பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப்பதிகாரி செல்வி ஜக்குலினினதும் வைத்திய சேவைக் குழுவினதும் தூய்மையானவைத்தியசேவைகள் எமது வரலாற்றில் மிக முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகவிலங்கியல் துறைத்தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு இணைப்பதிகாரி மருத்துவதாதி செல்வி ஜக்குலினின் சேவையைப்பாராட்டி நடாத்தப்பட்ட விழாவிலே உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வைத்தியசாலை அபிவிருத்திச்சபையால் நடாத்தப்பட்ட இவ்விழாவிற்கு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் கணேசலிங்கம் குறிப்பிட்டதாவது.

எமது நாட்டில் சேவையாற்ற வேண்டிய எமது டாக்டர்களும் மருத்துவ சேவையாளர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கும் போது பிரான்ஸ் தேசத்திலிருந்து வசதிகள் குறைந்த எமது பகுதிகளுக்கு பிரான்ஸ் வைத்தியக்குழுவும் இணைப்பதிகாரி செல்வி ஜக்குலினும் வந்து மருத்துவசேவைகளை வழங்கி வருவது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

இந்திய இராணுவ அடாவடித்தனங்கள் வடமராட்சிப் பகுதியில் தலைவிரித்தாடிய பயங்கர காலகட்டத்தில் பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவும் அக்குழு இணைப்பதிகாரி செல்வி ஜக்குலினும் ஆற்றிய சேவைகள் வடமராட்சிப்பகுதி மக்களின் உயிர்களைக்காப்பாற்றியது என்பதனை யாவரும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இந்திய இராணுவ நடவடிக்கைகளின்போது இவ்வைத்தியசாலையின் தேவைகள் ஸ்தாபித்திருந்த வேளைகளில் அதனை இயங்கச் செய்து நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றிய பெருமை செல்வி ஜக்குலினுக்கு உண்டு.

இவர் எமது நாட்டில் உள்ளவர்கள் மேற்கொண்ட வைத்திய சேவைகளிலும் பார்க்க மிகச் சிறந்த வைத்திய சேவைகளை எமது மக்களுக்கு வழங்கியுள்ளார்.

செல்வி ஜக்குலின் நடவடிக்கைகளினால் இவ் வைத்தியசாலை பல்வேறுதுறைகளில் அபிவிருத்தியடைந்துள்ளது. வைத்தியசாலைக்கு வேண்டிய பல்லாயிரம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள், மருந்துகள் வைத்தியசாலைக்குக் கிடைத்துள்ளன. இலங்கை அரசாங்கம் தமிழ் பகுதி வைத்தியசாலைகளின் அபிவிருத்திகளில் கவனம் செலுத்தாமல் இருக்கும் போது பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு மூலம் பிரான்ஸ் தேசம் இவ்வைத்தியசாலைக்கு வழங்கிய சேவைகளும், உதவிகளும் எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எஸ். விசாகசுந்தரம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

செல்வி ஜக்குலினை இணைப்பதிகாரியாகக் கொண்ட பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு வடமாரட்சி மக்களுக்கு 18 மாதங்கள் சேவைகளை வழங்கியுள்ளது. இச்சேவைகளை நாங்கள் கணிப்பிடும்போது எமது அரசினால் 18 வருடங்கள் மேற்கொள்ளப்படும் சேவைகள் 18 மாதங்களில் இக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத் தாக்குதல் நடைபெறும் நேரங்களில் அவ்விடங்களில் எல்லாம் தோன்றி சடலங்களையும், காயப்பட்டவர்களையும் வைத்தியசாலைச்கு எடுத்துச் சென்று வேண்டிய சேவைகளை வழங்கியதை நாம் மறந்துவிட முடியாது.

உதவி அரசாங்க அதிபர் திரு ரீ. சந்திரசேகரம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் இந்திய இராணுவத்தின் மிருகத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்ட போது இப்பகுதி மக்களின் உயிர்களைக் காப்பாற்றியும், மருத்துவ சேவைகளை வழங்கவும் இணைப்பதிகாரி செல்வி ஜக்குலின் மேற்கொண்ட துணிவான நடவடிக்கைகள் அதிசயிக்கப்பட வேண்டியன,

இவ்வைத்திய சேவைக் குழுவினர் வடமராட்சிப் பகுதி மக்களுக்கு ஆற்றிய புனிதமான சேவைகள் அளப்பரியன. வைத்தியசாலையின் அபிவிருத்தி, செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் இவர்கள் அதிக கவனமெடுத்துள்ளனர்.

போதகர் வணக்கத்திற்குரிய எஸ். மார்க்கண்டு அடிகளாரும் உரையாற்றினார். அதையடுத்து செல்வி ஜக்குலின் பதிலுரை வழங்கினார். வைத்தியசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. வி. செல்வராஜன் செல்வி ஜக்குலினுக்கு 'பனை உற்பத்தி அழகு பாவனைப் பொருள்களை' அன்பளிப்புச் செய்தார்.

உதவிச் செயலாளர் திரு. ஏ. ஞானச்சந்திரன் நன்றியுரை வழங்கினார். விழா ஆரம்பத்தில் செல்வி ஜக்குலின் அபிவிருத்திச் சபை உறுப்பினர்களால் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இங்கு நடைபெற்ற 'அகதிகள்' நாடகம் பலரது பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டது. (25)

## தேனிசைச் செல்லப்பா நிகழ்ச்சிகள்

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டாவது தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி கடந்த 9ஆம் திகதி வந்தாறுமூலை சிங்கோ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு கரிகாலன் தலைமை தாங்கினார்.

மட்டக்களப்பு மாவட்ட ராணுவப் பொறுப்பாளர் திரு. றீகன், மங்கள விளக்கேற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தேனிசை செல்லப்பாவின் புரட்சி கீதங்கள் முழங்கின. பல்லாயிரக் கணக்கான மக்கள் கடல் அலை போல் திரண்டு வந்து செல்லப் குழுவினர் வழங்கியகீதங்களை கேட்ட வண்ணம் இருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு யாழ்.மாவட்ட கலை கலாசாரப்பிரிவு மகளிர் அணி பொறுப்பாளர் கீதா, புதுவை ரெத்தினதுரை ஆகியோரும் உரைஆற்றினர். (26)

## நாளை இந்து


### யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2–30. 4-00, 6.30 & 9.30
BRUCE LEE IN RUCELEE THELEGEND
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறுவிடுமுறை நாட்களில் 10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
"நாயகன்"
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 878

**லிடோ (யாழ்)**
தினசரி 4–00, 6-45, 9–45
சனி ஞாயிறு காலை10-30 2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
16 வயதினிலே
(B/860)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 10·00, 2·00, 4·45, 7·00, 9·45
EDDIE MURPHY IN BEVERLY HILLS COP
( Color-Scope )

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை

## முடித்த ஆசிரியர்க்கு சான்றிதழ்கள்

(சுண்டிக்குளி)

பாலர் பாடசாலைப்பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்த 37 ஆசிரியைகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதற்கு அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்தயுனிசெவ் அதிகாரிகள்பிரதமவிருந்தினர்களாகபங்குபற்றினர் இவ்வைபவத்திற்கு மாநகர சபை ஆணையாளர் வி.பி.பாலசிங்கம்சுகாதாரவைத்தியஅதிகாரி திருமதி கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (61)

## மீண்டும் சிறுபோகம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தற்பொழுது சிறுபோகச் செய்கைக் கான வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கடந்த வருடங்களில் இந்தியப் படையினர் விவசாயிகளை பெரிதும் இம்சப் படுத்தினர் இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப் பட்டது.

ஆனால் தற்பொழுது நிலமை சகஜ நிலை அடைந்துள்ளதுடன் கோடைமழையும்பெய்து வருவதால் அமோக விளைச் பெறக் கூடிய வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (29)

## பெற்றோர்தினம்

(தம்பிலுவில்)

தம்பிலுவில்- திருக்கோவில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவாசமித்தியினால் அன்னை ஈஸ்வதாம்பாள் தினத்தை யொட்டி கடந்த புதன்கிழமை பாலவிகாஷ் மனிதமேம் பாட்டுக்கல்வி பயிலும் மாணவர்களது பெற்றோர் தினமாக கொண்டாடப்பட்டது.

பாலவிகாஷ் மனித மேம்பாட்டுக்கல்வி பாடத்திட்டங்களையும் அதன் விளைவுகளையும் விளக்கும் கண்காட்சி ஒன்றும் அன்று நடாத்தப்பட்டது.இக்கண்காட்சியை திருக்கோவில் உதவி ஆசாங்க அதிபர் திரு. எஸ். வி. ஆர். வேதநாயகம் திறந்து வைத்தார்.

மேற்படி சமித்தியின் தலைவர் திரு.சி.என். செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் மாணவர்களுக்கான பரிசில்களை உதவி அரசாங்க அதிபரும் அவரது பாரியாரும் வழங்கினர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

ரையாளர் / உதவி விரிவுரையாளர்.

3. சட்ட மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர்
4. மகப் பேற்றியலும் மாதர் நோயியலும் / மன நோயியல் அறுவை மருத்துவத்தில் செய்முறை காட்டுநர்.
5. ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 111

**உடற்கல்விப் பணிப்பாளர்:**

**குறிப்பு:**

1. உடலமைப்பியல் [illegible] விரிவுரை[illegible]ம் 11 / விரிவுரையாளர் / உதவிவிரிவுரையாளர் பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க முடியும்.
   (அ) மிருக வைத்திய மாணி அல்லது பல் அறுவைச் சிகிச்சை மாணியும் இதர பட்டப்பின் படிப்புத் தகைமைகளும் உயர் தொழில் தகைமைகளும் உள்ளவர்கள்.
2. இரசாயன வியலில் சிறப்பு விஞ்ஞான மாணிப் பட்டத்துடன் பௌதீகவியலை துணைப் பாடமாகக் கொண்டுள்ள அல்லது-பௌதீகவியலில் இரசாயனவியலைத் துணைப் பாடமாகக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப் படும்.

**சம்பள அளவுத்திட்டம்**

பேராசிரியர்:

ரூபா 12,200 – 6 X 300 – 14,000/–
(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11:

ரூபா 8,000 - 5 X 250 - 9,250/-
(மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர்:
(மருத்தும்)

ரூபா 4,500 – 10 X 200- 6,500/-
(மாதமொன்றுக்கு)

(மருத்துவ பீட விரிவுரையாளர் ஒருவர்முதலாவது நியமனத்தின் போது ரூபா 4,500/- சம்பளத்திற்கு இரண்டு படிகள் அதிகமாக,அதாவது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4,900/- ரூபாவில் வைக்கப்படுவார்).

(அரக்கொடைத்தவிசு) விண்ணப்ப முடிவுத்திகதி 1990ஆகஸ்ட் 7ஆம் திகதி ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1990 ஜூன் 08ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பங்கள் இப் பல்கலைக்கழத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக்கொடைத்தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23 X 10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனையபதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஓட்டப்பட்ட 23 X 10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கவிரும்புவோர் தனித் தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுதர்.

குறிப்பு:

1. சைவசித்தாந்தபேராசிரியர்(அறக்கொடைதவிசு) பதவிக்கான நியமனம்மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தஅடிப்படையிலான நியமனமாக இருக்கும்.
2. உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(B-700)

இந்திய இராணுவ அடாவடித்தனங்கள் வடமராட்சிப் பகுதியில் தலைவிரித்தாடிய பயங்கர காலகட்டத்தில் பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவும் அக்குழு இணைப்பதிகாரி செல்வி ஜக்குலினும் ஆற்றிய சேவைகள் வடமராட்சிப்பகுதி மக்களின் உயிர்களைக்காப்பாற்றியது என்பதனை யாவரும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இந்திய இராணுவ நடவடிக்கைகளின்போது இவ்வைத்தியசாலையின் தேவைகள் ஸ்தாபித்திருந்த வேளைகளில் அதனை இயங்கச் செய்து நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றிய பெருமை செல்வி ஜக்குலினுக்கு உண்டு.

களை வழங்கியதை நாம் மறந்துவிட முடியாது.

உதவி அரசாங்க அதிபர் திரு ரீ. சந்திரசேகரம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் இந்திய இராணுவத்தின் மிருகத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்ட போது இப்பகுதி மக்களின் உயிர்களைக் காப்பாற்றியும், மருத்துவ சேவைகளை வழங்கவும் இணைப்பதிகாரி செல்வி ஜக்குலின் மேற்கொண்ட துணிவான நடவடிக்கைகள் அதிசயிக்கப்பட வேண்டியன,

இவ்வைத்திய சேவைக் குழுவினர் வடமராட்சிப் பகுதி மக்களுக்கு ஆற்றிய புனித

மட்டக்களப்பு மாவட்ட ராணுவப் பொறுப்பாளர் திரு. நீகன், மங்கள விளக்கேற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தேனிசை செல்லப்பாவின் புரட்சி கீதங்கள் முழங்கின. பல்லாயிரக் கணக்கான மக்கள் கடல் அலை போல் திரண்டு வந்து செல்லப் குழுவினர் வழங்கியகீதங்களை கேட்ட வண்ணம் இருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு யாழ்.மாவட்ட கலை கலா சாரப்பிரிவு மகளிர் அணி பொறுப்பாளர் கீதா,புதுவை ரெத்தினதுரை ஆகியோரும் உரைஆற்றினர். (26)

# விவசாய போதனாசிரியர் புதியதொழிற்சங்கம் உதயம்

(பருத்தித்துறை)

வடக்கு கிழக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்களுக்கான புதிய தொழிற் சங்கமொன்று அண்மையில் திருகோணமலையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலாயத்தில் இடம் பெற்ற வடக்கு கிழக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர் தொழிற் சங்கத்தின் தலைவராக திரு .வீதியாகராசா தெரிவானார். செயலாளராக திரு ஐ. கேதீஸ்வரனும், பொருளாளராக திரு எம். கார்த்திகேயனும் தெரிவாகினர்.

இத் தொழிற் சங்கபொதுக் கூட்ட மொன்று இம் மாதம் 23ஆம் திகதி வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறுமென்றும் சங்கச் செயலாளர் திரு. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார் (25)

# விபுலானந்தர் மீட்சிப்பத்து நூல் வெளியீட்டு விழா

(மட்டக்களப்பு)

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை எழுதிய ''விபுலானந்தர் மீட்சிப்பத்து''என்ற நூல் வெளியீட்டு விழாவின் போது பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் ''பண்டிதமணி நினைவு மலர் , ''செந்தமிழ்க் களஞ்சியம்'' ஆகிய நூல் அறிமுக விழாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறும்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம் ஏற்பாடு செய்துள்ள இவ் விழாவில் வட-கிழக்கு மாகாணசபை புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் திரு.ஏ.கே.பத்மநாதன், கல்வி அமைச்சு செயலாளர் திரு.இ. ஜே. சற்குணராஜா, மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு.இ.யோகநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவார்.

மகாவித்துவான் எப்.எக்ஸ். ஸி.நடராசா தலைமையில் இவ்வைபவம் நடைபெறும்.

இராமகிருஷ்ன மிசன் முதல்வர் ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தஜீ, மட்டு நகர் திருமலை ஆயர் அதி. வண. கிங்ஸ்ஸி சுவாம் பிள்ளை, அல்ஹாஜ் மௌலவி எஸ்.எம். அலியார் (பாலாஹ்) ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

''விபுலானந்தர் மீட்சிப் பத்து'' என்ற தலைப்பில் திரு. ஆ. அரசரெத்தினம், ''புலவர்மணி நூல்கள்'' என்ற தலைப்பில் இரா. நாகலிங்கம் ஆகியோர் கருத்துரையாற்றுவர்.

பண்டிதமணியின் நூல் அறிமுக விழாவில் ''பண்டிமணி நினைவு மலர்'' என்ற தலைப்பில் கலாநிதி சி.மௌனகுரு, ''செந்தமிழ் களஞ்சியம்'' என்ற தலைப்பில் வித்துவான் க.சொக்கலிங்கம், ''பண்டிதமணியின் நூல்கள்'' என்ற தலைப்பில் கலாநிதி இ.பாலசுந்தரம் ஆகியோர் கருத்துரையாற்றுவர்.

மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு.கு. சோமசுந்தரம் சிறப்புரையாற்றுவார். ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் பதிலுரையாற்றுவார். (37)

## நாளை இந்து இளைஞர்கொடிதினம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட் இந்து இளைஞர் பேரவையின் கொடித்தினம் இன்று கொண்டாடப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தினத்தில் யாழ்.மாவட்டத்தில் உள்ளசகலஇந்து மன்றங்களும் கொடி விற்பனையை மேற்கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. (24)

## பாடசாலையில் உபகரணங்கள் சேதம்

(தம்பிலுவில்)

தம்பிலுவில் மணல்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் விடுமுறை தினங்களில்,ஒரு சிலர் பாடசாலையுள் பிரவேசித்து பாடசாலை சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதோடு, கட்டிடங்களையும் அசுத்தமாக்கியுள்ளனர்

இது குறித்து பெற்றோர் பழைய மாணவர்கள்பெரிதும் கவலை தெரிவித்துள்ள்ளர்.

16 வயதினிலே
(B/860)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·00, 2·00, 4·45, 7·00, 9·45
EDDIE MURPHY
IN
BEVERLY HILLS COP
( Color - Scope )

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
**UNMASKING THE IDOL**
(Color)

## விளையாட்டரங்கு திறப்புவிழா

(முள்ளியவளை)

எதிர்வரும் 27 ஆம் திகதி ''மேஜர் பசீலன்'' விளையாட்டரங்கு திறப்பு விழா நடைபெற உள்ளது.

இதனையொட்டி உதவி அரசாங்கப் பிரிவுகளுக்கிடையிலான மாபெரும் விளையாட்டுப் போட்டி கட்டம் கட்டமாக நடைபெறும்.

**வல்வை இந்திர விழா**

வல்வையில் கடந்த 9. 05. 1990 (புதன் கிழமை) இந்திர விழா நடைபெற்றபோது உதவியும், ஒத்துழைப்பும் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அவ் விழாவின்போது மூன்று கைக்கடிகாரம் (பெண்களின்) கண்டெடுக்கப்பட்டுள்ளது. தகுந்த அடையாளம் கூறி பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பா. பிறேம்குமார்
(குட்டி)
நெடியகாடு, வல்வெட்டித்துறை
—வல்வை மக்கள்
(B/951)

# சர்வதேச ரீதியில் பிஜிக்கு எதிராக இந்தியா பொய்ப் பிரசாரம்

## பிஜி தகவல்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

(சுவா)

இந்தியாவுக்கும் தென்பசுபிக்குள் அமைந்துள்ள பிஜிக்கும் இடையிலான உறவுகள் மேலும் மோசமடைந்து வருகின்றன.

இந்தியா சர்வதேச ரீதியில் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது என பிஜி குற்றம் சாட்டியிருக்கிறது.

பிஜி அரசாங்கம் இந்திய மக்களுக்கு எதிராகவும், ஏனைய இனத்தவர்களுக்கு எதிராகவும் பாரபட்சம் காட்டி வருகிறது. சுதேசவாசிகளுக்கு அதிகமான சலுகைகளை வழங்குகிறது என இந்தியா சர்வதேச ரீதியாக பிரசாரம் செய்து வருகின்றது என்றும், இதற்கென ஒரு இயக்கம்கூட இந்தியா அமைத்திருக்கிறது என்றும் பிஜி சாடியுள்ளது.

பிஜியின் தகவல் துறை அமைச்சர் ரெட்டு இனோகேயினால் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இவ் அறிக்கையில் பிஜிக்கு எதிராகப் பிரசார இயக்கம் ஒன்றை இந்தியா ஆரம்பித்திருப்பது துரதிஷ்டவசமானது என்றும், அதே வேளை இந்தியாவில் சாதி முறை நிலவுகிறது என்றும், வன்முறைகளும் மரணங்களும் அன்றாட நிகழ்ச்சியாக காணப்படுகின்றது என்றும் தெரிவித்தது.

மேலும் அறிக்கையில் இந்தியா எண்ணிக்கை அற்ற ரீதியில் இலங்கையில் தமிழர்களை கொன்று குவித்திருக்கிறது என்றும் அத்துடன் எல்லை நாடான பாகிஸ்தானுடனும் போருக்கு தயாராகிறது எனவும் குற்றம் சாட்டப்படடுள்ளது.

மேலும் இவ் அறிக்கையில் பிஜியில் உள்ள இரண்டு பிரதான சமூகங்களுக்கு மத்தியிலான உணர்வுகளை கடினப்படுத்தி வருகிறது என குற்றம் சாட்டியது.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு பிஜியில் இராணுவப் புரட்சியின் மூலம் பூர்வீக இந்தியர்களின் ஆதிக்கத்தில் இருந்து கூட்டு அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

அத்துடன் பிஜியில் உள்ள இந்தியத் தூதுவர் பிஜியின் உள்விவகாரங்களில் தலையிடுகிறார் என்று குற்றஞ்சாட்டி இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார். இதனைத் தொடர்ந்தே இரு நாடுகளுக்கும் இடையே உறவுகள் மோசமடைந்து வந்தன.

## இணைந்த ஜேர்மனியின் மே. ஜேர்மன் மார்க்கே நாணயம்

(பொன்)

மேற்கு, கிழக்கு ஜேர்மனிகளுக்கிடையே பொருளாதாரம் நீதிசம்பந்தமாக இணைக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு ஜேர்மனியின் மாக்சிச பொருளாதாரத்தை எவ்விதம் மேற்குலகிற்கு ஏற்ற வகையில் சீர் செய்யலாம் என்பதையிட்டு இரு ஜேர்மனிகளின் வெளிநாட்டு அமைச்சர்களும் கலந்துரையாடுவார்கள்.

மேற்கு ஜேர்மனியின் பென்சன், வேலையற்றோர் காப்புறுதித் திட்டம் என்பன கிழக்கு ஜேர்மனியிலும் அறிமுகப்படுத்தப்படும் இதற்கான நிதியை மேற்கு ஜேர்மன் கொடுத்து உதவும்.

மேலும் மேற்கு ஜேர்மனியின் 'மார்க்' நாணயமே ஒன்றிணைந்த ஜேர்மனியின் பணமாகக் கொள்ளப்படும். அநேகமாக அடுத்த வருடம் முதல் இது அமுலுக்கு வரும் என மேற்கு ஜேர்மனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொர்பசேவை அவமதித்தால் ஆறுவருடச் சிறைத்தண்டனை

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவை அவமதித்தால் அல்லது அவதூறாகப் பேசினால் ஆறு வருட கால சிறைத்தண்டனை வழங்கப்படும் என்ற சட்டம் பாராளுமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

முன்னொரு போதும் இல்லாத வகையில் சோவியத் ஜனாதிபதி மீது பகிரங்கத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இத்தகையதொரு சட்டத்தை இயற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கவிஞர் கு.சா.கி. காலமானார்

(சென்னை)

பிரபல கவிஞரும் நாடகாசிரியரும் எழுத்தாளருமான திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி நேற்றுக் காலமானார். குற்றம் புரிந்தவர் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பதேது என்பது போன்ற பல பாடல்களை இவர் பாடியிருக்கிறார்.

## தமிழகத்தில் மீண்டும் மேல்சபை

(சேலம்)

தமிழ் நாட்டில் மீண்டும் மேல்சபை விரைவில் அமைக்கப்படவிருக்கிறது. புதியமேல் சபையில் பெண் உறுப்பினர்களுக்கு அதிக இடம் ஒதுக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

காவிரி நீர் விவகாரம்

# மூப்பனார், வாழப்பாடி கோஷ்டிகள் இழுபறி

(சென்னை)

ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி காவிரி நீர் விவகாரம் பற்றி முதலமைச்சர் மு. கருணாநிதியும் கர்நாடக மாநில முதல்வர் வீரேந்திர பட்டீலும் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்தாலும் நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று அனைத்துக்கட்சி எம். பி. களும் பிரதமர் வி. பி. சிங்கைக் கேட்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

தமிழக அரசு தயாரித்த மனுவில் மூப்பனார் ஆதரவாளர்களான எம். பி. கள் கைச்சாத்திட்டார்கள். தி.மு. க. எம். பி. களுடன் சேர்ந்து பிரதம மந்திரியைச் சந்திக்க புதுடில்லிக்கும் போனார்கள்.

எல்லாம் நடந்து முடிந்த பிறகுதான் காங்கிரஸ் எம். பி. க்கள் தனியாகச் சென்று பிரதமரைச் சந்திக்க வேண்டும் என்று எல்லா காங்கிரஸ் எம்.பி.க்களுக்கும் வாழப்பாடியிடமிருந்து தந்திகள் பறந்தன.

காவிரி நீர் விவகாரம் தமிழ் நாட்டுப் பிரச்சினை. இதில் கட்சி பேதம் கிடையாது என்பது மூப்பனார் வாதம்.

காவிரி நீர்ப் பிரச்சினை பரபரப்பாகி வாழப்பாடி கோஷ்டிக்கும், மூப்பனார் கோஷ்டிக்கும் இடையில் காங்கிரஸ் கட்சிக்குள் பலத்த இழுபறி நிலவுகிறதாம்.

## ஐரோப்பிய தலைநகர்களில் விடுதலைப்புலிகள்மேதினம்

(பாரிஸ்)

உலகத் தொழிலாளர்களின் எழுச்சி தினமான மேதினம் தமிழீழத்தில் சிறப்பாக இடம் பெற்றது போன்று பல்வேறு உலகத் தொழிலாள இயக்கங்களுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மேதினப் பேரணிகள் பல்வேறு ஐரோப்பிய தலைநகரங்களில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

பாரிசில் பலம் வாய்ந்த தொழிலாளர் அமைப்பான சீ. ஜீ. ரி. யுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பதாகை தாங்கிய தமிழீழ மக்களின் அணிவகுப்பு சிறப்பாக இடம் பெற்றது.

புரட்சிகரகோசங்களுடனும் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட சிவப்புக் கொடிகளுடனும் தமிழீழத் தொழிலாளர்கள் கரம்கோர்த்துஅணிவகுத்தனர். பல இன தொழிலாளர்களும், அடக்கப்பட்ட மக்களும் புரட்சிகர உணர்வுடன் அவ்விடத்தில் சக பிரஞ்சுத் தொழிலாளர்களுடன் இணைந்து அணிவகுத்தனர்.

தமிழீழத் தொழிலாளர்களின் அணிவகுப்பில் எம் கலை, பண்பாட்டு ஆற்றலை பிரதிபலிக்கும் கோலாட்டம், மேள நாதசுவர சகிதம் இடம் பெற்றது. இது ஏராளமான மக்களைக் கவர்ந்ததுடன், பிரபல பிரஞ்சு தினசரியான LHUMANITE இல் மேதினம் தொடர்பான செய்திகளுக்குப் புகைப்படமாகவும் அமைந்தது.

சுவிஸ், பெல்ஜியம், நோர்வே ஆகிய நாடுகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பதாகை தாங்கிய ஊர்வலங்கள், கண்காட்சிகள் என்பன சிறப்பாகஇடம்பெற்றுள்ளன.

தமிழீழ தாயகமே எங்கள் தாகம் - எங்களுக்கு வேண்டும் சுதந்திரம் - எங்கள் தலைவர் பிரபாகரன் – உலகத் தொழிலாளர்களே கரம் கொடுங்கள் தொழிலாளர் நாம் ஒன்றுபடுவோம் என்பன இம்மேதினத்தின் மூக்கிய கோசங்களாக அமைந்தன.

கொலம்பியா

## கார்க்குண்டு வெடிப்பு 15 பேர் பலி!

(பொகோட்டோ)

கொலம்பியாவின் தலைநகரான பொகோட்டோவில் இடம்பெற்ற இருகார்க்குண்டு வெடிப்புகளில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இக்குண்டு வெடிப்பானது கடந்த சனிக்கிழமை சன நெருக்கடி மிக்க கடைப்பகுதிகளில் நடைபெற்றது. இச் சம்பவத்திற்குப் போதைப் பொருள் கடத்தல் கோஷ்டியான மாபியா இயக்கமே பொறுப்பு எனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நகரின் மத்தியில் வெடித்த குண்டு 89 கிலோ எடை என்றும், அடுத்த குண்டு 60கிலோ எடை கொண்டதென்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் முதல் சட்ட விரோத போதைப் பொருள் கடத்தல் மீது அரசாங்கம் பெரும் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது.

இது வரை 7 கார்க்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இப் போதைவஷ்து கடத்தல்காரர்

## சர்வதேசசெஞ்சிலுவை தினத்தில் கலை, கலாசாரக் கண்காட்சி

(விசேட நிருபர்)

சர்வதேச செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்- கிளையினரால் விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரனையுடன் முதன் முறையாக யாழ். செஞ்சிலுவைச் சங்க தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில் நடத்தப்பட்ட கலை, கலாசார, கண்காட்சி, விளையாட்டு நிகழ்ச்சிகள் பல்லாயிரக் கணக்

வீராங்கனைகளையும் கப்டன் டீ. எம். ஏ. குணசிங்கம் அறிமுகம் செய்து வைத்தார்.

காலை 10 மணிமுதல் 12மணி வரை செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் நடைபெற்ற இரத்த தானநிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

குறிப்பாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக்

# பாணுக்கு பிரதியீடாக ஒடியலையும் மரவள்ளியையும் பயன்படுத்தலாம்

இன்றைய சூழ் நிலையில் நாம் உள்ளூர் உணவு உற்பத்தியினை மேற்கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும். அந்த முறையில் பனை உணவுப் பொருட்களையும் மா

பெட்டியில் இட்டு அவித்துக் கொள்ளலாம். சிலவேளைகளில் முளைக் கீரையையும் நன்றாக கழுவி வெட்டி பிட்டு மாவுடன் கலந்து நீற்றுப் பெட்டியில் வைத்து அவிக்க

### மரவள்ளிப் பயன்பாடு

ஒடியலிலிருந்து மட்டுமல்ல மரவள்ளிக் கிழங்கில்இருந்தும் கூட நாம் உணவுப் பதார்த்தங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சுட்டு ச[illegible]பிடலாம். இவ் உணவானது மிகவும் திடகாத்திரத்தை கொடுக்கக் கூடியது. அத்துடன் ஏனைய சுகவீனங்கள் வருவதைத் தடுக்கக் கூடிய தைரியத்தையும்

தெரிவித்தது. பட்டு வருகிறது. ளது. மைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார். பிரதிபலிக்கும் கோலாட்டம், மேள நாதசுவர சகிதம் இடம் இடம்பெற்ற இருகார்க்குண்டு வெடிப்புகளில் 15 பொதுமக்

களில் நடைபெற்றது. இச் சம்பவத்திற்குப் போதைப் பொருள் கடத்தல் கோஷ்டியான மாபியா இயக்கமே பொறுப்பு எனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நகரின் மத்தியில் வெடித்த குண்டு 89 கிலோ எடை என்றும், அடுத்த குண்டு 60கிலோ எடை கொண்டதென்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் முதல் சட்ட விரோத போதைப் பொருள் கடத்தல் மீது அரசாங்கம் பெரும் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது.

இதுவரை 7 கார்க்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இப்போதைவஷ்து கடத்தல்காரர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும், 250 க்கு மேற்பட்ட மக்கள் இதனால் இறந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

# சர்வதேசசெஞ்சிலுவை தினத்தில் கலை, கலாசாரக் கண்காட்சி

(விசேட நிருபர்)

சர்வதேச செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்- கிளையினரால் விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் முதன் முறையாக யாழ். செஞ்சிலுவைச் சங்க தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில்நடத்தப்பட்ட கலை, கலாசார, கண்காட்சி, விளையாட்டு நிகழ்ச்சிகள் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் நடைபெற்றன.

பிரமுகர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்களையும், வீராங்கனைகளையும் கப்டன் டீ. எம். ஏ. குணசிங்கம் அறிமுகம் செய்து வைத்தார்.

காலை 10 மணிமுதல் 12மணி வரை செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் நடைபெற்ற இரத்த தானநிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

குறிப்பாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவ மாணவிகள் முன்வந்து இரத்த தானம் செய்தனர்.

பிற்பகல் 2 மணிவரை நடைபெற்ற கண்காட்சியில் செஞ்சிலுவைச் சங்க தொழில் வாய்ப்புத்திட்டத்தால் உதவிபெறுவோர் வாழை நாரில் தயாரித்த பொருட்கள், பனையில் இருந்து தயாரித்த பொருட்கள் என்பன கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் சித்திர, ஓவியக் கண்காட்சியும் இடம்பெற்றிருந்தன.

மாலை நிகழ்ச்சிகள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களின் மங்களஇசையுடன் நடைபெற்றன.

திருமதி இராஜேஸ்வரி குருகுழுவினரின் வீணை இசையும் இன்னிசை வேந்தர் பொ. சுந்தரலிங்கத்தின் வாய்ப்பாட்டும் கலை நிகழ்ச்சிகளில் இடம் பெற்றன.

பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் கலந்து சிறப்பித்தார். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குத் திருமதி யூலியற் அன்ரன் அல்பிரட் பரிசில்களை வழங்கினார்- (21)

## நஞ்சருத்தித் தற்கொலை

ஆலய திருவிழாவிற்குச் சென்றவர் வீடு திரும்பியதும் நஞ்சருந்தி உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று புங்குடுதீவு கிழக்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

புங்குடுதீவு ஐந்தாம் வட்டாரத்தைச்சேர்ந்த நடராசா ஜெயராசா என்பவரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவராவார்

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்தவியாழக்கிழமை இரவு புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவிலுக்குச் சென்று பூங்காவனத் திருவிழாவில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பியவுடன் வீட்டின் பின்னால் சென்று நஞ்சுத் திரவத்தை அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டார் இவரின் மன விரக்தியே தற்கொலைக்குக் காரணம் எனத் தெரிகிறது. (22)

# தொண்டமான் காங்கிரஸை கணேசன் சந்திக்க விருப்பம்

(கொழும்பு)

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் வி. பி. கணேசன் நாடு திரும்பவிருக்கும் தோட்டத் தொழிலாளர் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார். இத் தகவலை பொதுச் செயலாளர் கணேசன் தோட்டத் தொழில்த்துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தோட்டத் தொழிலாளர் தொடர்பாக எமது கட்சிக்கு ஒரு கடப்பாடு உண்டு. சம்பந்தப்பட்டவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படாமல் மனிதாபிமான அடிப்படையில் பிரச்சினைகளைக் தீர்க்க வேண்டும். எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தோட்டத் தொழிலாளர்கள் உழைத்துள்ளார்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கணேசன் மேலும் தனது கடிதத்தில் குறிப்பிடும்போது தோட்டப் பகுதியிலுள்ள எல்லா அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளினதும், நம்பிக்கைகளைப் பெற்று, கட்சிகளின் ஆலோசனைகளையும் கேட்க வேண்டும் என்றார்.

# பாணுக்கு பிரதியீடாக ஒடியலையும் மரவள்ளியையும் பயன்படுத்தலாம்

இன்றைய சூழ் நிலையில் நாம் உள்ளூர் உணவு உற்பத்தியினை மேற்கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும். அந்த முறையில் பனை உணவுப் பொருட்களையும் மாவள்ளி போன்றவற்றில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருட்களையும் நாம் நாளாந்தம் எமது உணவில் பகிர்ந்து கொள்ளலாம்.

வடக்கில் இன்று பாணிலேயே பெரும்பான்மையான மக்கள் தங்கி இருக்கிறார்கள் இதனால் தான் போலும், பேக்கரி உரிமையாளர்களும், மக்களின் பலவீனங்களை புரிந்துகொண்டு தமக்குத் தாமே சில முடிவுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இதன் படி நான்கு ரூபா தொண்ணூறு சதத்திக்கு 450 கிராம் பாண் தயாரிக்க தமக்கு கட்டுப்படியாகாது எனக் கூறி 350 கிராம் பாண் தயாரிக்கின்றார்கள்.

இங்கு மக்கள் நலன் சிறிதும் கவனிக்கப்படவில்லை ஆகவே மக்கள் இதனைக் கவனத்திற் கொண்டு உள்ளூர் உற்பத்திப் பொருட்களில் இருந்து கிடக்கும் உணவுப் பொருட்களை தமது உணவில் பெருமளவு கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நடந்து கொண்டால் மக்கள் சத்துள்ள உணவையும் அத்துடன் வருமானத்திற்கு ஏற்றவகையில் தமது செலவையும் மேற்கொள்ளலாம்.

### ஒடியல் பயன்பாடு

பனங் கிழங்கின் ஒடியலில் இருந்து கிடக்கும் உணவுப் பொருட்களின் தன்மையினையும் அதன் செய்முறையையும் கவனிப்போம்.

முதலாவதாக ஒடியற் பிட்டு செய்முறையையும் அதில் அடங்கி இருக்கும் சத்துக்களின் வகைகளையும் பார்ப்போம்.

காய்ந்த ஒடியலைத் துண்டுகளாக முறித்து உரலில் இட்டு இடித்து மாவாக்கி குந்துகள் தும்புகள் நீக்கி நன்கு அரித்தெடுத்துத் தண்ணீர் தெளித்து ஊற்றிய பின் அடைந்த மாவைச் சீலைத்துணியில் இட்டு பிழிந்து எடுத்தல் வேண்டும்.

பின்பு உப்பு நீர் தெளித்து உருட்டிப் பிட்டாக நீற்றுப் பெட்டியில் இட்டு அவித்துக் கொள்ளலாம். சிலவேளைகளில் முளைக் கீரையையும் நன்றாக கழுவி வெட்டி பிட்டு மாவுடன் கலந்து நீற்றுப் பெட்டியில் வைத்து அவிக்கலாம். ஒடியற்பிட்டுக்கு முளை கீரை மிகவும் உவப்பாக இருக்கும்.

இப்பிட்டுக்கு ஒரு கொத்து ஒடியல் மாவுக்கு அளவுக்கேற்ற உப்பும் நீரும் கலந்து, ஒரு தேங்காய் துருவிய பூவும் இட்டும் கலந்தால் மிக சுவையாக இருக்கும்.

ஒடியல் உணவில் 81 வீத மாச்சத்தும், 4.8 வீத புரதச் சத்தும், 2வீத உலோகப் பொருள் சத்தும், 0,3 வீத கொழுப்புச் சத்தும் காணப் படுகின்றது.

ஒடியல் பிட்டை வேறு பல வழிகளில் சுவை கூட்டலாம். பிட்டினை அவித்து அதனைத் தேங்காய்ப் பாலில் இட்டு பால் பிட்டாகவும், நெய் கலந்து நெய்ப் பிட்டாகவும், தேங்காய்ப் பூ, மிளகு, உப்பு, மிளகாய், சீரகம் முதலியன கலந்து மிளகுப் பிட்டாகவும் அவிக்கலாம்.

இவ்வாறாகப் பல வழிகளில் ஒடியல் மாவில் இருந்து பிட்டு அவிக்கலாம். எமது வீட்டுத் தேவைக்கு நாம் இதனை வீட்டில் செய்து கொள்ளலாம். வர்த்தக நடவடிக்கைகளுக்காக பாவிப்பவர்கள் இதே முறையில் பதப்படுத்த வேண்டும். ஆலைகளில் இதனைச் செய்யலாம். ஒடியலை நன்கு காய வைத்து துண்டுகளாக முறித்து ஆலையில் இட்டு அதனை பின்பு, முன்பு கூறியவாறு பதப்படுத்த வேண்டும்.

இவ்வாறாக நாம் பாணுக்குப் பதிலான பதிலீட்டு உணவினை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நாம் எமது நிறைந்த வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதோடு, நிறைவுள்ள உணவினையும் பெற்றுக் கொள்கிறோம்.

மேலும் இவ்வாறு நாம் எமது உணவுப் பொருள்களை பெற்று வந்தால் பாணுக்கான கேள்வி சந்தையில் குறைவடையும். ஆகவே அதன் உற்பத்தித்திறன் காலப்போக்கில் அதிகரிக்கும். அத்துடன் நாம் வீட்டுக் கைத்தொழில் உற்பத்தியையும் வளர்த்துக் கொள்ளலாம்.

### மரவள்ளிப் பயன்பாடு

ஒடியலிலிருந்து மட்டுமல்ல மரவள்ளிக் கிழங்கில்இருந்தும் கூட நாம் உணவுப் பதார்த்தங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மரவள்ளிக் கிழங்கினை சிறிது சிறிதாக சீவி நன்கு உலரவிட்டு பின்பு அதனை உரலில் இட்டோ அல்லது ஆலையில் அரைத்து மாவாக்கி இம் மாவில் பிட்டு அவிக்கலாம்.

இப்பிட்டானது ஏறத்தாள கோதுமைமாவில் அவிக்கும் பிட்டைப்[illegible]லவே காணப்படும். அத்துடன் இம் மாவில் ஒட்டும் தன்மை காணப்படுவதினால் கரைத்து தோசையும் சுடலாம்.

### குரக்கன் பயன்பாடு

இன்னும் கூறப்போனால் குரக்கன் மாவில் இருந்து ரொட்டி, பிட்டு, தோசையினை நாம் தயாரித்துக் கொள்ளலாம்.

குரக்கன்மாவுடன் சிறிதளவு உப்பும், தேங்காய்ப் பூவும், சக்கரையும் கலந்து தேங்காய் எண்ணையிலோ அல்லது நல்லெண்ணையிலோ ரொட்டி சுட்டு ச[illegible]பிடலாம். இவ் உணவானது மிகவும் திடகாத்திரத்தை கொடுக்கக் கூடியது. அத்துடன் ஏனைய சுகவீனங்கள் வருவதைத் தடுக்கக் கூடிய தைரியத்தையும் கொடுக்கிறது.

மேலும் இம்மாவில் பிட்டு, தோசை என்பனவும் சுட்டுக் கொள்ளலாம். இவை யாவும் எமது உள்நாட்டுப் பொருள்களில் இருந்துபெறும் உணவுப் பதார்த்தங்களே ஆகும்.

இவ்வாறாக நாம் பதிலீட்டு உணவுப் பொருள்களை உபயோகிப்பதன் மூலம் பாணை நம்பியிராது எமது தேவையை நாமே பூர்த்தி செய்யக்கூடிய நிலைக்கு வருகின்றோம். எமது பலத்தைப் பெற்றுக் கொள்கிறோம். சுகாதார நலத்தை பெறுகிறோம். எதிர் காலத்தில் வடக்கு, கிழக்கு மக்கள் அன்னிய செலாவணியை மீதப்படுத்த வழிகாட்டிகளாக அமைகின்றன.

★

## மீன் விற்கத் தடை

(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று, திருக்கோயில், பொத்துவில் பகுதிகளில் மீன்கள் விற்பது சுமார் இரு வாரங்களாகத் தடைசெய்யப் பட்டுள்ளது.

இதற்கான காரணம் மீனினங்களில் ஒருவகை நோய் இருப்பதாகவைத்தியர்கள் அறிவித்ததன் பொருட்டுதடை விதிக்கப்பட்டுள்ளது. (40)

## வசந்தகால விளையாட்டுவிழா

(வந்தாறுமூலை)

ஏறாவூர் ஐக்கிய விளையாட்டு கழகத்தின் மாபெரும் வசந்தகால விளையாட்டு விழா எதிர் வரும் 18, 19, 20 திகதிகளில் ஏறாவூர் எல்லை வீதி, விளையாட்டுத் திடலில் கோலாகலமாக நடைபெறவுள்ளது. மரதன், சைக்கிள் ஓட்டம், வழுக்கு மரம் ஏறல், கயிறு இழுத்தல் மற்றும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறும்- (26)

## தனிச் சிங்களத்தில் கடிதம்

(அம்பாறை)

அம்பாறை தெங்கு பயிர்ச் செய்கைச்சபை பிராந்தியக் காரியாலயத்தில் தமிழ் தெரியாத சிங்களவர் ஒருவர் கணக்காளராக இருப்பதால் இம்மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் தெங்கு உற்பத்தியாளர்கள் பெரிதும் கஸ்டமுற வேண்டியுள்ளது. இவரிடமிருந்து தனிச்சிங்களத்தில் மாத்திரமே கடிதங்கள் வருவதாகம் தெரிவிக்கப்படுகின்றது. (48)

## குஜ்ரால் சீனா விஜயம்

(புதுடில்லி)

அடுத்த மாதமளவில் இந்திய வெளிநாட்டமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் தலைமையிலான குழு ஒன்று சீனா பயணமாக உள்ளது என இந்திய பிரதமர் வி. பி. சிங் அறிவித்துள்ளார்.

ஆந்திர சூறாவளி அழிவு நிலைமையை பார்வையிட்டு புதுடில்லி திரும்பிய திரு. வி. பி. சிங் இவ் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

மேலும் சீனாவுடனான உறவுகளை தாம் புதுப்பித்துக் கொள்ள உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பர்னாலா ராஜினாமா

(சண்டிகார்)

பஞ்சாப் முன்னாள் முதலமைச்சரும் லோங்கோவாப் பிரிவுக்கட்சித் தலைவருமான சுர்ஜித்சிங்பர்னாலா கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். தொடர்ந்தும் தாம் கட்சியின் தொண்டராக இருக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சேனைக்குடியிருப்பில் 70 வீடுகள் அமைப்பு

(அம்பாறை)

புனர்வாழ்வு அமைச்சின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் கல்முனை உதவி அரச அதிபர் தமிழ்ப் பிரிவில் முதன் முதலாக சேனைக்குடியிருப்பில் 70 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீடொன்றிற்கு 15.000 ரூபா வழங்கப்படுமெனவும், இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக இவ்வுதவி அரச அதிபர் பிரிவிலுள்ள குருந்தையடி, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் 135 வீடுகள் அமைக்கப்படுமெனவும் உதவி அரச அதிபர் திரு. வி. அழகரெத்தினம் தெரிவித்தார். (48)

## அம்பாறை மாவட்டம்

# பயிற்சி ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் வன் செயல்களினால் பெரிதும் பாதிக்கப் பட்டவர்களுக்கான பயிற்சி ஆசிரியர் நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஒரு வாரகாலமாக கல்முனை கல்விமாவட்ட பிரதம கல்வி அதிகாரி காரியாலத்தில் நடைபெறுகின்றது

இம்மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தமிழ் பேசும் இனத்தவர்கள்தினமும் நேர்முகப் பரீட்சைக்கு தொகுதி தொகுதியாகக் கலந்து கொள்கின்றனர்

குடும்பத்தில் தாய் தந்தையரை சகோதரர்களை இழந்தவர்கள் தமது இழப்பை கிராம சேவகர்கள் மூலமாக சிபார்சு செய்து உதவி அரச அதிபரின் சிபாரிசுடன் தோற்றினால் சலுகை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது (48)

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயகத்தில் 02-02-1961

தியாகத்தில் 1989-05-15

### லெப். கேணல் நவம் [redacted]

செல்லப்பெருமாள் அருமைராசா

கொக்குத்தொடுவாய்

தமிழீழ மக்களை நேசித்தாய்

தன்னலம் கருதாது

## அனுதாபம்

(பொத்துவில்நிருபர்)

ஜனநாயக தொழிலாளர்காங்கிரஸ் தலைவரும் முஸ்லிம்களினதும் தோட்டத்தொழிலாளரான தமிழ்மக்களினதும் முது பெருந்தலைவரான மர்ஹீம் ஜனாப் ஏ.அஸீஸ் அவர்களின் மறைவு தொழிலாளர் வர்க்கத்திற்குபெரும்பாதிப்பாகும்.

அன்னாரது மறைவு குறித்து பொத்துவில் முஸ்லிம் லீக் வாலிபமுன்னணியின் தலைவர் ஜனாப். ஏ. சி. அகமது லெவ்வை அன்னாரது குடும்பங்களுக்கு தனது அனுதாபத்தையும் ஆழ்ந்தகவலையையும் தெரிவித்துள்ளார்.

## மென்பந்து கிரிக்கெட்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சவனாய் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 6 பேர் கொண்ட 5 ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் 15க்கு மேற்பட்ட விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றின.

நொக் அவுட் முறையிலான இப்போட்டியின் இறுதி ஆட்டம் பென்சன் அணிக்கும் உதயதாரகை அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் உதயதாரகையணி சிறப்பாக ஆடி பென்சன் அணியைத் தோற்கடித்து வெற்றிக்கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதாரகையணி 5ஓவர்கள்முடிவில் 43ஓட்டங்களைப் பெற்றது. தலைவர் மோகன் 12 ஓட்டங்களைப்பெற்றிருந்தார். தொடர்ந்து ஆடிய பென்சன் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

உதயதாரகை அணியின் இவ்வெற்றிக்குஅணியின் சிறப்பான பந்துவீச்சே காரணமாயிருந்தது.குறிப்பாக இறுதி ஓவரில் பென்சன் அணி 10 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தபோதும் குலேந்திரனால் வீசப்பட்ட அந்த ஓவர் ஒரு Maiden Wicket ஓவராகவே அமைந்தது ஒரு விசேட அம்சமாகும் (25)

## 10 வருடமாக தற்காலிக வேலை

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்றி மலேரியா தடை இயக்கத்தில் சுமார் பத்து வருடகாலமாக தெளிகருவி இயக்குனர்கள் தற்காலிகமாக கடமை ஆற்றிவருகின்றனர்.

கடந்த காலத்தில் இந்தி

# மன்னார் புகையிரத நிலையம் இருளில் மூழ்கியுள்ளது

(யாழ்ப்பாணம்)

மன்னார் புகையிரத நிலையத்திற்கு இரவு புகையிரத சேவைதற்போது விஸ்தரிக்கப் பட்ட போதிலும் அங்கு மின்சார விளக்குகள் பொருத்தப்படாத காரணத்தால் புகையிரத நிலையம் இருளில்மூழ்கிக் காணப்படுகிறது.

இரவுப்புகையிரதப் பயணத்திற்கு வரும் பயணிகள் ஒருவரோடு ஒருவர் முட்டி மோதுவதாக புகையிரத நிலையத் தலைவர் தெரிவிக்கிறார். இதனை தகுந்த விதத்தில் பயன்படுத்தும் சில திருடர் கூட்டம் பயணிகளின் உடமைகளை திருடிச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

## பருத்தித்துறை

# இலங்கை வங்கியில் 25,000 ரூபா கை நழுவி விட்டது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கு வைப்புச் செய்யக் கொண்டு செல்லப்பட்ட 25,000 ரூபா பணம் கை நழுவிய சம்பவமொன்று புலோலியில் நிகழ்ந்துள்ளது.

தும்பளையைச் சேர்ந்த கே. சின்னத்தம்பி என்பவர் பருத்தித்துறை இலங்கை வங்கியில் வைப்புச் செய்வதற்காக 25,000 ரூபா பணத்தைக் கொண்டு சென்று வங்கிவெளி மேசையில் வைத்து வைப்புப் பத்திரத்தை நிரப்பும் போது பணத்தை மேசையில் வைத்து விட்டு பத்திரம் நிரப்பி முடிந்ததும் பணத்தை மறந்து விட்டாராம் சற்று நேரத்தின்பின் தான் அவருக்கு மேசை மீது பணம் 25, 000 ரூபாவையும் வைத்தது ஞாபகம் வந்துள்ளதுவைத்தஇடத்தில் பார்த்த போது பணம் இருக்கவில்லை பணம் மாயமாய் மறைந்து விட்டது. பணத்தைத் கண்டு பிடிக்க மேற்கொண்ட சகல நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்தன பணத்தை இழந்த சின்னத்தம்பி கவலையுடன் வீடு திரும்பினார். (25)

# விரைவில் கிராமிய வங்கி அடகு நகைகள் மீளளிப்பு

(கல்லாறு)

மட்டக்களப்பு மாவட்ட கிராமிய வங்கிகளில் அடகு நகைகளுக்கு பணம் செலுத்தியவர்களின் நகைகளை மீளளிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு கொழும்பு மக்கள் வங்கி தலைமையகத்திற்கு இம் மாதம் இருபத்திமூன்றாந் திகதி சமூகமளிக்க வேண்டுமென மட்டக்களப்பு மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம் சம்பந்தப்பட்ட கிராமிய வங்கிகளுக்கு அறிவித்துள்ளது. பணம் செலுத்தி பல வருடங்களாகியும் இன்னமும் அடவு நகைகள் குறித்த கிராமிய வங்கியால் மீளளிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.அடுத்த மாதமளவில் இந்நகைகள் மீளளிக்கப் படுமென அறியக் கூடியதாக இருக்கின்றது. (45)

## களுவாஞ்சிக்குடியில் தமிழ்த்தினவிழா

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி கோட்ட கல்வி அலுவலகத்திற்குட்பட்ட சுமார் எழுபத்தைந்து பாடசாலைகள் பங்களிப்புச் செய்த பேச்சு, தனி நடனம், குழுநடனம், கும்மி, பா ஓதல் போன்ற போட்டி நிகழ்ச்சிகள் பட்டிருப்பு மகாவித்தியாலத்தில் மூன்று மண்டபங்களில் நடைபெற்றதுதனி நடனத்தில்பெரியகல்லாறு மகாவித்தியாலத்தைச்சேர்ந்த சிறுமி க. பிரதீபா முனிவர்வேட மேற்று அனைவரையும் வெகுவாகக் கவர்ந்து, முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (45)

## பாதை புனரமைப்பு

## மதியபோசனம் இடைநிறுத்தம்

(கல்லாறு)

ஏற்கனவே வழங்கப்பட்ட மதியபோசனத்திற்கான கொடுப்பனவுகள் கிடைக்காததாலும், மதியபோசனம்

# புயல் நிவாரணமாக இலங்கை இந்தியாவிற்கு 1000 கி.தேயிலை

(கொழும்பு)

ஆந்திர மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலைத் தொடர்ந்து பல உயிர்கள் பலியானதையிட்டும், ஆந்திர மக்களது உடமைகளின் அழிவு குறித்தும் இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தமது ஆழ்ந்த வருத்தத்தை இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கிற்கு தெரிவித்து ஓர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வருத்தக் கடிதத்துடன் ஆந்திர மாநில மக்களுக்கான நிவாரணமாக ஆயிரம் கிலோ இலங்கைத் தேயிலையையும் அன்பளிப்புச் செய்துள்ளார். இத்தேயிலைப் பொதி ஜனாதிபதியின் உத்தரவுத் தொடர்ந்து உடன் விமானம் மூலம் ஆந்திராவின் தலைநகர் விஜயவாடாவுக்கு எடுத்துச்செல்லப் பட்டது.

## இருளில் மூழ்கும் கிராமங்கள்

(அட்டாளைச்சேனை)

ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப் பற்று, திருக்கோயில், தம்பிலுவில் கோளாவில் என்னும் கிராமங்களில் சென்ற மாதம் 27 ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து இரவிலும், பகலிலும் மின்சாரத் தடையேற் பட்டுள்ளது.

இது பற்றி அம்பாறை மாவட்ட மின்சாரப் பொறியியலாளர் காரியாலயத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது மின்சாரத் தடைக்கான காரணத்லதை தெரிவிக்க மறுத்து விட்டார். (46)

## அதிபர் அதிகாரியாக இடமாற்றம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கொத்தணிபாடசாலைகளின் அதிபர்திரு ஏ.சி. நல்லையா அவர்கள் இம் மாதம் பதினைந்தாம் திகதி முதல் வேலணை கோட்டக் கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாக இடமாற்றம் செய்யப் படுகின்றார்,

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் மூன்றைச் சேர்ந்த திரு நல்லையா அவர்கள் கடந்த மூன்று வருடகாலமாக புங்குடுதீவு கொத்தணி அதிபராக பணியாற்றி வந்தார்.

இவருக்குப் பதிலாக புங்குடுதீவு கொத்தணி அதிபராக திரு க. பேரம்பலம் (அதிபர்) அவர்கள்நியமிக்கப் படுகின்றார். (22(


# தொழிற் பயிற்சிகள்

**❋ Airconditioning & Refrigeration**

நீண்டகால இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ்நகரில் இவ் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்வதற்கு ஏற்ற வாறு செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

**❋ Spoken English**

ஒரு மாத முழுநேர வகுப்பும், சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்களும்.

அச்சடித்த பாடக் குறிப்பு இலவசமாக வழங்கப்படும்.

**❋ றேடியோ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்**

ரெலிவிஷன், வீடியோ, டெக், றேடியோ திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப் படும்.

காலம்: 4 மாதம்

**❋ றீவைண்டிங்**

ரான்ஸ்போமர், மின்மோட்டர், மின் விசிறி, ஆமேச்சர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்



தாயகத்தில்
02-02-1961

தியாகத்தில்
1989-05-15

## லெப். கேணல் நவம் [redacted])

செல்லப்பெருமாள் அருமைராசா
கொக்குத்தொடுவாய்

தமிழீழ மக்களை நேசித்தாய்
தன்னலம் கருதாது
தமிழீழ மண்ணைப் பூஜித்தாய்
ஆதலினால்
மரணத்தை யாசித்தாய்

1989-05-13 ஆம் திகதியன்று நெடுங்கேணியில் இந்திய இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் காயமுற்று 15 ஆம் திகதி வீரமரணம் அடைந்த உனக்கு எமது அஞ்சலிகள்

வீழ்ந்தாலும் வித்துக்களாக...
மடிந்தாலும் மக்களுக்காக...

- நெடுங்கேணி மக்கள்

(R/ 478)

பான பந்துவீச்சே காரண மாயிருந்தது. குறிப்பாக இறுதி ஓவரில் பென்சன் அணி 10 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தபோதும் குலேந்திரனால் வீசப்பட்ட அந்த ஓவர் ஒரு Maiden Wicket ஓவராகவே அமைந்தது ஒரு விசேட அம்சமாகும் (25)

## 10 வருடமாக தற்காலிக வேலை

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்ரி மலேரியா தடை இயக்கத்தில் சுமார் பத்து வருடகாலமாக தெளிகருவி இயக்குனர்கள் தற்காலிகமாக கடமை ஆற்றிவருகின்றனர்.

கடந்த காலத்தில் இந்தியப்படை தேசவிரோத கும்பல்கள் ஆகியவற்றின் பல்வேறு அடாவடித்தனத்தின் மத்தியிலும் இவர்கள் கடமை ஆற்றி வந்தனர்

தற்போது இப்பதவிக்கு வெற்றிடங்கள் இருந்தும் நிரந்தரம் ஆக்கவில்லை என இவ் தெளிகருவி இயக்குனர்கள் எமது ஈழநாதம் நிருபரிடம் கவலையுடன் தெரிவித்தனர். (29)

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி கோட்ட கல்வி அலுவலகத்திற்குட்பட்ட சுமார் எழுபத்தைந்து பாடசாலைகள் பங்களிப்புச் செய்த பேச்சு, தனி நடனம், குழுநடனம், கும்மி, பாஓதல் போன்ற போட்டி நிகழ்ச்சிகள் பட்டிருப்பு மகாவித்தியாலத்தில் மூன்று மண்டபங்களில் நடைபெற்றது. தனி நடனத்தில் பெரியகல்லாறு மகாவித்தியாலத்தைச்சேர்ந்த சிறுமி க. பிரதீபா முனிவர்வேட மேற்று அனைவரையும் வெகுவாகக் கவர்ந்து, முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (45)

## பாதை புனரமைப்பு

(அட்டாளைச்சேனை)

திருக்கோயில் தம்பிலுவில் பிரதான பாதை கல்முனை வீதிப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் செப்பனிடப்பட்டு வருகிறது. (46)

## பஸ்கள் வரவில்லை

(அட்டாளைச்சேனை)

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் வேண்டுதலின் பேரால் அக்கரைப்பற்று சாலைக்கு இருபஸ்கள் புது வருடத்துக்கு முன்னர் தருவதாக போக்கு வரத்து அமைச்சு தெரிவித்திருந்தது ஆனால் அது இது காலவரைக்கும் வந்து சேர வில்லையாம் என சாலை முகாமையாளர் தெரிவித்தார். (46)

## கிராம அபிவிருத்தி விழா

(வந்தாறுமூலை)

கடந்த வியாழக்கிழமை அன்று விவசாய உற்பத்தி மாதிரிகிராம அபிவிருத்தி விழா பாலையடித்தோணா மகாவித்தியாலயத்தில் கோறளைப்பற்று உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். வரதராஜன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவிற்கு கௌரவ விருந்தினர்களாக மட்- அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அம்பாறை மாவட்ட பொருளியல் திட்டமிடல் பொறுப்பாளர் டேவிட், மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு, விசு, மற்றும் மட். மாவட்ட காணி அதிகாரி எஸ் கே. அன்ரனிராஜா, விவசாய அபிவிருத்தி அதிகார சபை பிரதி பணிப்பாளர் திரு வீ. கனகரெட்ணம் மற்றும் பல விவசாய அதிகாரிகளும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இறுதியாக அதிஸ்டசீட்டு இழுப்பும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. (29)

வங்கி பிராந்திய அலுவலகம் சம்பந்தப்பட்ட கிராமிய வங்கிகளுக்கு அறிவித்துள்ளது. பணம் செலுத்தி பல வருடங்களாகியும் இன்னமும் அடவு நகைகள் குறித்த கிராமிய வங்கியால் மீளளிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த மாதமளவில் இந்நகைகள் மீளளிக்கப் படுமென அறியக் கூடியதாக இருக்கின்றது. (45)

## மதியபோசனம் இடைநிறுத்தம்

(கல்லாறு)

ஏற்கனவே வழங்கப்பட்ட மதியபோசனத்திற்கான கொடுப்பனவுகள் கிடைக்காததாலும், மதியபோசனம் வழங்குதல் பற்றிய திட்டவட்டமான அறிவுறுத்தல்கள் கிடைக்காததாலும் பாடசாலைகளுக்குரிய மதியபோசனத்தை இடை நிறுத்த வேண்டியுள்ளதாக இங்குள்ள பாடசாலை அதிபர் வட்டாரங்கள் தெரிவித்தன. (45)

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(அட்டாளைச்சேனை)

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பகுதி அரசாங்க மருத்துவ மனைகளுக்கு நோயாளரின் தேவைகளுக்கு ஏற்ற அத்தியாவசியமான ஊசி மருந்து, சேலைன், குளிசை வகைகள் தனியார் கடைகளில் அதிக செலவில் வாங்கித்தான் நோயாளியை குணப்படுத்த வேண்டியிருக்கிறது.

இம்மருந்து வகைகள் சிங்களப் பகுதியிலுள்ள வைத்திய சாலைகளில் மிகவும் அதிகளவில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (46)


யாழ்நகரில் இவ் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்வதற்கு ஏற்றவாறு செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

❋ **Spoken English**
ஒரு மாத முழுநேர வகுப்பும், சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்களும்.
அச்சடித்த பாடக் குறிப்பு இலவசமாக வழங்கப்படும்.

❋ **றேடியோ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்**
ரெலிவிஷன், வீடியோ, டெக், றேடியோ திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

❋ **றீவைண்டிங்**
ரான்ஸ்போமர், மின்மோட்டர், மின் விசிறி, ஆமேச்சர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

❋ **எலக்ரிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 2 மாதம்

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்:
16—05—90 (கிழமை நாட்கள்)
19—05—90 (சனி, ஞாயிறு)

குறிப்பு: யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தில் உள்ளோர் தபால் மூலம்
(1) றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங், (2) றீவைண்டிங். (3) எலக்ரிக்கல் வயறிங் பயிற்சிகளை பயிலலாம். பயிற்சி முடிவில் அந்தந்த மாவட்டங்களில் ஒருவார செய்முறைப்பயிற்சி வகுப்பு நடாத்தப்படும். சேரவிரும்புவோர் 25.05.90க்கு முன் சுயவிலாசமிடப்பட்ட கடித உறையை அனுப்பி விபரங்களை பெற்றுக் கொள்ளவும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவையருகாமை)

(B/68º)



## உதவித் தாதியர் பயிற்சி நெறி

## TRAINING FOR NURSES AIDE

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச "அக்குபங்சர்" பயிற்சிகள்

உங்கள் பதிவுக்கு:-
அதிபர்
Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.694)



வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
❋ கடிதங்கள் ❋ பார்சல்கள் ❋ தஸ்தாவேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்புகொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

**D.H.L. INTERNATIONAL LTD.**

C/o. COSMOS MARKETING SERVICES Ltd.
337, KASTHURIYAR ROAD.
JAFFNA.

(B.699)

**சிந்தனைக்கு**

ஈவதும் பெறுவதும் இல்லை விடுதலை.

--பாரதிதாசன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 15 - 05 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

த. பெ. எண். 05

# ஜே. வி. பி. யின் புத்துயிர்!

ஜனதா விமுக்திப் பெரமுன என்றும் ஜே. வி. பி. என்றும் அழைக்கப்படும் சிங்களத் தீவிரவாத இயக்கம் மீண்டும் தலையெடுத்திருக்கிறது.

சுமார் ஆறு மாதங்களுக்குமுன் இந்த இயக்கத்தின் தலைவர் ரோகணவிஜயவீராவும் அவரது நெருங்கிய சகபாடிகளும் கொல்லப்பட்டனர்.

இவர்கள் எப்படியான வாழ்க்கை நடத்தினார்கள் என்பதெல்லாம் பற்றி வெகுஜன தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மூலம் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டன.

ஜே.வி.பி. ஒழித்துக்கட்டப்பட்டுவிட்டது. இனி மீண்டும் அது தலையெடுக்க முடியாது என்று பலரும் கருதினார்கள்.

1971 ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கெதிராக ஆயுதக் கிளர்ச்சி நடத்திய ஜே.வி.பி. யினர் சிங்களப் பகுதிகளில் சில மாவட்டங்களில் தமது நிர்வாகத்தைச் சில வாரங்கள் நடத்தினர்.

அன்று இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உதவிகோரி உலக நாடுகளுக்குக் கோரிக்கை விடுத்தார்.

உதவி செய்வதற்கு முதலில் பறந்தோடி வந்தது இந்தியாதான்.

பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களும் சிறிலங்கா அரச படைகளினால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். சிங்கள இளைஞர்களின் சடலங்கள் ஆற்று வெள்ளத்தில் அள்ளிச் செல்லப்பட்ட காட்சிகளைக் கண்டவர் பலர்!

ஆயுதக் கிளர்ச்சி அடக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்கள் பலர் வடபகுதியில் அக்கராயன் போன்ற இடங்களில் புனர்வாழ்வு முகாம்கள் என்று அமைக்கப்பட்ட முகாம்களில் வைக்கப்பட்டு ''மூளைச் சலவை'' செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி. தலைவர் ரோகணவிஜயவீராவும் அவரது சகபாடிகளும் விசேஷ நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின் ஆட்சிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜே.வி.பிக்கு மன்னிப்பளித்து ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு வழிவகுத்தார்.

ஜே. வி. பியும் இதற்கு ஒப்புக்கொண்டு கொழும்பு மாநகரசபைத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டது.

# கிழக்கு மேற்கு ஜேர்மனிகளின் உருவாக்கம்

## (ஒரு வரலாற்று நோக்கு)

2 ஆம் மகாயுத்தத்தின் விளைவாக மிகப்பெரிய அளவில் ஜேர்மனி பாதிக்கப்பட்டு தோல்வியுற்று, நிபந்தனையற்ற முறையில் சரணடைந்தது. 1945இல் யுத்தத்தில் பங்கு கொண்ட நேசநாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, ஆகியன யால்டா, பொட்ஸ்டாம் உடன்படிக்கைகள் மூலம் ஜேர்மனி குறித்து சில தீர்மானங்களை எடுத்தன. ஜேர்மனியை இராணுவமயம் அற்ற அரசாக்குதல், அதன் இராணுவத்தைக் கலைத்தல் அதனது உள்ளார்ந்த யுத்த வளத்தை அழித்தல் கைத்தொழிலைக் கட்டுப்படுத்தல், அரசியல், பொருளாதார அமைப்பைப் பன்முகப்படுத்தல் அந்நிய நாடுகளில் ஜேர்மன் துருப்புக்கள் நிலைகொள்ளாதிருக்கவிடல் மேலும் இதனது பரப்புக்கள் குறித்து சமாதான மாநாட்டில் தீர்மானம் எடுக்கும் வரை பின்வரும் முறைகளில் அந்நாட்டை நிர்வகிக்கவும் அதனைக் கைப்பற்றப்பட்ட பிரதேசமாக வைத்திருக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

### நிர்வகிக்கும் முறைகளாவன

(1) கொனிஸ்பேர்க் நகர் உட்பட கிழக்கு பிரஸ்சியாவில் வடபகுதியை ரஷ்யாவின் கீழ் விடுவது.

(2) ஒடர் - நீஸ் நதி முகத்துவாரத்தில் உள்ள செற்றின் நகரை முழுமையாக உட்படுத்தி ஒடர் நீஸ் நகருக்குக் கிழக்காக உள்ள ஜேர்மன் பரப்புகளை டான்சிக் நகர் உட்பட போலந்தின் நிர்வாகத்தின் கீழ் விடுவது.

(3) ஒடர் - நீஸ்நதிக்கு மேற்காக உள்ள ஜேர்மன் பரப்பை நான்கு வலயமாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் வெற்றியாளர்களான பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் விடுவது ரஷ்யா வலயத்தின் மேற்கு எல்லை அதனது படைகளை யுத்தத்தில் அமெரிக்க பிரித்தானிய படைகளை சந்தித்த கோடாகும் ரஷ்யப்படை கைப்பற்றிய ஜேர்மன் பரப்புக்குள் பேர்லின் இருந்த போதும் பெரிய பேர்லின் நகரை லண்டன் உடன்படிக்கையின் கீழ் நான்கு துண்டுகளாகப் பிரித்து ஒவ்வொரு துண்டையும் முறையே பிரித்...

என்ற நிபந்தனையில் சோவியத் படைகள் அங்கிருந்து வெளியேறின.

1945க்குப் பின்னர் ரஷ்யாவிற்கும் மூன்று வெற்றி நாடுகளுக்கும் இடையில் உறவுகள் சீர்குலையலாயின இதனால் ரஷ்யா நேசநாடுகளின் கூட்டத்தைப் பகிஷ்கரித்து வெளியேறியது. அதே நேரத்தில் பிரித்தானியா பிரான்ஸ்அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையில் ஜேர்மன்விவகாரம் குறித்து உறவு சீராக இருந்ததுடன் இம் மூன்று நாடுகளாலும் நிர்வகிக்கப்பட்ட ஜேர்மன் பரப்புகளுக்கிஇடையேயும் தொடர்புகள் வளரலாயின. இந்தப் போக்கால் ரஷ்யாவின் நிர்வாகத்தின்கீழ் இருந்த பரப்புக்களும்ஏனைய மேற்கு நாடுகளுக்குக் கீழ் இருந்த ஜேர்மன் பரப்புகளுக்கும் இடையே உறவு நலிவடைந்து வேறுபட்ட முறையில்செல்லலாயின இதே போக்கு பேர்லின் நகரத்திலும் காணப்பட்டது. மேற்கு நாடுகளுக்குக் கீழ் இருந்த பேர்லின் நகரின் மூன்று துண்டுகளும் தங்களுக்கிடையே உறவை விருத்தி செய்த வேளையில் இவைக்கும் ரஷ்ய நிர்வாகத்தின் கீழ் இருந்த துண்டுக்கும் இடையே உறவு குறைவடைந்து சென்றது. 1948 இல் மேற்கு நாடுகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்த பேர்லின் நகருக்கான போக்குவரத்தை ரஷ்யா தடைசெய்த போதும் மேற்கு நாடுகள் வான் வழியாக பேர்லின் நகர மக்களுக்குத் தேவையான பொருட்களைக்கொடுத்தனர். ரஷ்யா மேற்கொண்ட தடை முயற்சியால் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்காததால் 1949 இல் இதனை விலத்திக் கொண்டது. இந்தத் தடைக் காலத்தில் 2 லட்சத்து 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட விமானப் பயணங்கள் பேர்லினுக்கு இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1949 ஆம் ஆண்டில் பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் கீழ் இருந்த மூன்று வலயங்களும் ஒருங்கிணைந்து ஜேர்மன் சமஸ்டிக் குடியரசு உருவாகி...

குடியரசு ரஷ்யாவிடம் இருந்து மேலும் அதிகாரங்களைப் பெற்றதுடன் 1955 இல் வார்சோ ஒப்பந்த அமைப்பிலும் சேர்ந்துகொண்டது. இவ்விரு ஜேர்மன் அரசுகளும் படிப்படியாகச் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறத் தொடங்கின. ஆரம்பத்தில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசை அங்கீகரிப்பதில் பல நாடுகள் தயக்கம் காட்டின. 1973 ஆம் ஆண்டு இரு ஜேர்மனிகளும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றன.

1937 ஆம் ஆண்டில் இருந்த ஜேர்மன் (Third Reich) நாட்டு நிலப்பரப்பில் மேற்கு பேர்லின் உட்பட மேற்கு ஜேர்மனி 52.8% நிலப்பரப்பையும் கிழக்கு ஜேர்மனி 22.9% நிலப்பரப்பையும் கொண்டிருக்க, ஒடர் நீஸ்சுக்குக் கிழக்கே போலந்திடமும், ரஷ்யாவிடமும் இழந்த நிலப்பரப்பு 24·5% உள்ளது. ஜேர்மனியின் பொருளாதாரம் யுத்தத்தில் சின்னாபின்னமாக்கப்பட்டும், அதனது நகரங்கள், கிராமங்கள் நிர்மூலமாக்கப்பட்டும், கிழக்குப்பிரதேசத்தில் இருந்தும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் ஜேர்மனியர்கள் மேற்கு ஜேர்மனிக்கு லட்சக்கணக்கில் இடம்பெயர்ந்த வேளையில் மிகக் குறுகிய காலத்தில் உலகம் வியக்கத்தக்க வகையில், மேற்குஜேர்மன் தனது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பியது. இதற்குப் பின்னணியில் பேராசிரியர் லுட்லிக் ஏகார்ட் என்பவர் 1950களில் முக்கியமாக இருந்தார். 1960களில் ஜேர்மனியில் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக...

> **இன்றைய உலக அரசியலில் கிழக்கு-மேற்கு ஜேர்மனிகளின் இணைப்பு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஆனால் இவ் இருஜேர்மனிகளும் எவ்வாறு துண்டிக்கப்பட்டன என்பதை இக் கட்டுரை விபரிக்கின்றது.**

எல்லையற்ற ஜேர்மனியின் அமைப்பின் காரணமாக, அதன் வரலாற்றில் அது அண்டை நாடுகளுடன் நிலப் பிரச்சினை காரணமாக, அடிக்கடி பிரச்சினைகளுக்கு உட்பட வேண்டியதாயிற்று. ஜேர்மனியின் சிறியஅயல்நாடுகளான பெல்ஜியம். லக்சம்பேர்க், டென்மார்க், நெதர்லாந்து போன்ற நாடுகளில் இறைமை, தன்னாதிக்கத்தை ஜேர்மனி மதிக்காததும், இவைகளின் சிலவற்றில் நடுநிலைக் கொள்கையை மதிக்காமல் செயற்பட்டு இருப்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஜேர்மனிகள் இணைய நடவடிக்கைகளை எடுக்க முன்னர் இரு ஜேர்மனியும் ஐக்கியப்படுவதனை ஐரோப்பிய நாடுகளும், உலக நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஐக்கிய செயற்பாட்டினால் புதிய பிரச்சினைகள் தோன்றாமலிருப்பதும், ஐரோப்பாவில் தற்போதுள்ள ஸ்திரத்தன்மை தொடர்ந்தும் பேணப்படுவதும் உறுதியாக்கப்பட வேண்டும். ஏனெனில் ஜேர்மனிகள் ஐக்கியப்படும் போது 80 மில்லியனுக்குமேற்பட்ட மக்களைக் கொண்ட பலம் பொருந்திய பொருளாதாரத்தையும். உயர்ந்த விஞ்ஞானத் தொழில் நுட்பத்தையும் பெற்ற நாடாக அது இருப்பதால் இத்தகைய பொருளாதாரத்தை, விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவை, இராணுவ அழிவு முயற்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் பின்னர் தோன்றலாம். ஐக்கிய ஜேர்மனியே சோவியத் குடியரசுக்கு அடுத்து ஐரோப்பாவில் கூடிய மக்கள் தொகையைக் கொண்ட நாடாகத் திகழும். அத்துடன், [illegible]ராப்பாவில் [illegible]தொழில்கூடமாகத் திகழும். இதனால் ஐரோப்...

## ஊர்சுற்றி

### எழுதுவது

ஜப்பானுக்குப் போன இலங்கைப் பிக்கு ஒருவர் ஜப்பானில் பின்பற்றப் படும்மகாயன பௌத்தத்தைத் தழுவிக்கொண்டார்.

இலங்கையில் பின்பற்றப்படும் பௌத்தம் தேர வாதம் எனப்படுகிறது.

தேரவாதத்தைப் பின்பற்றிய பௌத்த பிக்கு மகாயனபௌத்தத்தைத் தழுவிக் கொண்டதால் அவரை பௌத்த சங்க சபா என்ற பிக்குமார் அமைப்பிலிருந்து வெளியேற்றி விட்டதாக இந்த சபாவின் தலைமைப் பிக்கு அறிவித்திருக்கிறார்.

ஜப்பானிலிருந்து நாடு திரும்பும் வண. பெல்பொல விபாசிதேரோ என்ற அந்த பிக்குவுக்கு வரவேற்பளிக்கக் கூடாது என்றும் தலைமைப்பிக்கு கேட்டிருக்கிறார்.

இதை ஏற்று இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவும் வரவேற்பு ஏற்பாடுகள் செய்யவேண்டாம் என்று பணித்திருக்கிறார்.

ஜப்பானில் பின்பற்றப்படும் மகாயனப் பௌத்தத்தை ஸென் பௌத்தம் என்றும் இலங்கையின பின்பற்றப்படும் பௌத்தத்தை ஹீனயான பௌத்தம் என்றும் சொல்லப்படுவதுண்டு.

ஜப்பானில் பின்பற்றப்படும் பௌத்தமே புத்தபிரான் பிறந்த இந்தியாவிலும் பின்பற்றப்படுவதாகச் சொல்கிறார்கள்.

பௌத்த குருமார் சங்கத்திலிருந்து (சங்கசயா) நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட ஸ்ரீவியாசி தேரோ இந்தச்சபாவின் தலைமைப் பிக்குவுக்கு ஜப்பானிலிருந்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

மகாயன பௌத்தத்தைத் தாம் தழுவிக் கொண்டதற்குக் காரணம் ஏழைகளுக்குசேவை செய்வதற்காகவேயென்றும் இலங்கையில் ஏற்கனவே பல பிக்குகள் மகாயன பௌத்தத்தைத்...

ஆயுதக் கிளர்ச்சி அடக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்கள் பலர் வடபகுதியில் அக்கராயன் போன்ற இடங்களில் புனர்வாழ்வு முகாம்கள் என்று அமைக்கப்பட்ட முகாம்களில் வைக்கப்பட்டு ''மூளைச் சலவை'' செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி. தலைவர் ரோகணவிஜயவீராவும் அவரது சகபாடிகளும் விசேஷ நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின் ஆட்சிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜே.வி.பிக்கு மன்னிப்பளித்து ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு வழிவகுத்தார்.

ஜே. வி. பியும் இதற்கு ஒப்புக்கொண்டு கொழும்பு மாநகரசபைத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டது.

ஆனால் தேர்தல் தந்திரங்களில் அனுபவம்பெற்ற அரசியல் கட்சிகளுடன் ஜே. வி. பி. நின்றுபிடிக்க முடியவில்லை. தேர்தலில் தோல்வியையே கண்டது.

சிங்கள இளைஞர்களின் குறைகளுக்கு ஜனநாயக ரீதியில் தீர்வுகாண முடியாது என்ற முடிவுக்கு ஜே.வி.பி. தள்ளப்பட்டது.

மீண்டும் ஆயுதம் ஏந்திய ஜே. வி. பி. யினர் அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கினர்.

மீண்டும் ஜே. வி. பி. இயக்கத்தை ஜே. ஆர். ஜெயவர்த்தனா தடை செய்தார். தலைவர்களைக் கைது செய்து காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

ரோகணவிஜயவீராவும் சகபாடிகளும் தலைமறைவானார்கள். அரசுக்கெதிரான அவர்களது நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டிருந்தன.

1989 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற திரு. பிரேமதாசா ஜே. வி. பிக்கு மன்னிப்பளித்து பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வருமாறு அழைப்பு விடுத்தார்.

இதை ஜே. வி. பியினர் ஏற்றுக்கொள்ளவில்லை. பேச்சுவார்த்தைகளினால் பயன் கிடைக்கப்போவதில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் தென்னிலங்கையில் அரசியல்வாதிகளும் மற்றும் பலரும் தொடர்ந்து கொலை செய்யப்பட்டு வந்தனர். ஆயுதப் படையினரும் அவர்களது குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டனர்.

பழிக்குப்பழியாக ஆயுதப் படையினரும் ஜே. வி. பியினரின் ஆதரவாளர்கள் என்று சந்தேகப்பட்டவர்களையும் குடும்பத்தினரையும் கொன்றொழித்தனர்.

ஜே.வி.பி. தலைவர் ரோகணவிஜேவீராவும் அவரது நெருங்கிய சகபாடிகளும் ஆயுதப்படையினரால் கொலை செய்யப்பட்டனர். மற்றும் பலர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

ஜே. வி. பி. ஒழிக்கப்பட்டுவிட்டதாக அரசாங்கம் பெருமையுடன் கூறிக்கொண்டது. நாட்டில் மீண்டும் அமைதி ஏற்பட்டுவிட்டதாகப் பிரச்சாரம் செய்தது.

தென்னிலங்கையில் மீண்டும் கொலை கொள்ளைச் சம்பவங்கள் தலைகாட்டத் தொடங்கின.

இப்பொழுது ஜே. வி. பி. யின் புதிய தலைவராக சோமவன்ச அமரசிங்க என்பவர் பொறுப்பேற்று அறிக்கையும் விடுத்திருக்கிறார்.

புத்துயிர் பெற்றுள்ள ஜே. வி. பி. யினரை அழித்தொழிக்க ஆயுதப்படைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எந்தவொரு இயக்கத்தின் தலைவர்களை ஆயுதப் படையின் துணைகொண்டு அழித்துவிடலாம், பொது மக்களையும் அழிக்கலாம் ஆனால் அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு நிரந்தரமான தீர்வு காணப்படாதவரை புதிய புதிய தலைமையில் இயக்கம் வளர்ந்துகொண்டே போகும் என்பதற்கு ஜே. வி. பி. ஒரு உதாரணம்.

---

காக உள்ள ஜேர்மன் பரப்பை நான்கு வலயமாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் வெற்றியாளர்களான பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் விடுவது ரஷ்யா வலயத்தின் மேற்கு எல்லை அதனது படைகளை யுத்தத்தில் அமெரிக்க பிரித்தானிய படைகளை சந்தித்த கோடாகும் ரஷ்யப்படைகைப்பற்றிய ஜேர்மன் பரப்புக்குள் பேர்லின் இருந்த போதும் பெரிய பேர்லின் நகரை லண்டன் உடன்படிக்கையின் கீழ் நான்கு துண்டுகளாகப் பிரித்து ஒவ்வொரு துண்டையும் முறையே பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் நிர்வாகத்தின் கீழ் விடுவது.

மேலும் ஆஸ்திரியா ஜேர்மனி இணைப்பை (Anschluc) விடுவித்து ஆஸ்திரியாவை விடுதலையாக்கப்பட்ட நாடகப் பிரித்தானியாவும் அமெரிக்காவும் ஏற்றுக் கொண்ட போதும் ரஷ்யா தொடர்ந்தும் அங்கு நிலைகொண்டு இருந்தது. ஆஸ்திரியாவையும் அதன் தலைநகரான வியன்னாவையும் முறையே நான்கு வலயங்களாகவும் துண்டுகளாகவும் பிரித்து அவை நான்கு வல்லரசுகளால் நிர்வகிக்கப்பட்டன. 1955இல் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி ஆஸ்திரியா நடுநிலை நாடாக இருக்க வேண்டும்

வான் வழியாக பேர்லின் நகர மக்களுக்குத் தேவையான பொருட்களைக்கொடுத்தனர். ரஷ்யா மேற்கொண்ட தடை முயற்சியால் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்காததால் 1949 இல் இதனை விலத்திக் கொண்டது. இந்தத் தடைக் காலத்தில் 2 லட்சத்து 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட விமானப் பயணங்கள் பேர்லினுக்கு இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1949 ஆம் ஆண்டில் பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் கீழ் இருந்த மூன்று வலயங்களும் ஒருங்கிணைந்து ஜேர்மன் சமஸ்டிக் குடியரசு உருவாகியது. இதேபோலவே பேர்லின் மேற்கு நாடுகளின் மூன்று துண்டுகளும் ஒருங்கிணைந்து தன்னாதிக்க மேற்கு பேர்லின் நகரம் உருவாகியது. 1954இல் மேற்கு ஜேர்மன் தொடர்பாகப் பரிஸில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி 1955 இல் இந்நாடு முழுமையான அரசாக மாறி அதே ஆண்டில் வடஅத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பில் சேர்ந்து கொண்டது. 1957 இல் சாரில் (Saar) எடுத்த கருத்துக் கணிப்பின் முடிவாக இம்மாகாணம் மீண்டும் மேற்கு ஜேர்மனியின் பகுதியாக மாறியது. மேற்கு ஜேர்மனியில் ஏற்பட்ட மாற்றம் போல் 1949 இல் ரஷ்யாவின் கீழ் இருந்த வலயம் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசாக மாறியது. 1953 இல் இக்

ரங்கள், கிராமங்கள் நிர்மூலமாக்கப்பட்டும், கிழக்குப்பிரதேசத்தில் இருந்தும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் ஜேர்மனியர்கள் மேற்கு ஜேர்மனிக்கு லட்சக்கணக்கில் இடம்பெயர்ந்த வேளையில் மிகக் குறுகிய காலத்தில் உலகம் வியக்கத்தக்க வகையில், மேற்குஜேர்மன் தனது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பியது. இதற்குப் பின்னணியில் பேராசிரியர் லுட்லிக் ஏகார்ட் என்பவர் 1950களில் முக்கியமாக இருந்தார். 1960களில் ஜேர்மனியில் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக துருக்கி, போர்த்துக்கல்' இத்தாலி, யூகோசிலாவாக்கியா போன்ற நாடுகளில்

ஞானத் தொழில் நுட்பத்தையும் பெற்ற நாடாக அது இருப்பதால் இத்தகைய பொருளாதாரத்தை, விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவை, இராணுவ அழிவு முயற்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் பின்னர் தோன்றலாம். ஐக்கிய ஜேர்மனியே சோவியத் குடியரசுக்கு அடுத்து ஐரோப்பாவில் கூடிய மக்கள் தொகையைக் கொண்ட நாடாகத் திகழும். அத்துடன், [illegible]ராப்பாவில் [illegible]தொழில்கூடமாகத் திகழும். இதனால் ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக ஜேர்மனியின் அயல் நாடுகளுக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (Phd.)**

இருந்து அதிக தொழிலாளர்களை ஜேர்மனி வரவழைத்தது. இன்று மேற்கு ஜேர்மனியின் மக்கள் தொகையில் அதிதித் தொழிலாளர் பிரிவுகளினர் 5%க்கு மேல் உள்ளனர்.

20ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக ஜேர்மனி விளங்கியது. இது 1 ஆம், 2 ஆம் மகாயுத்தங்களில் பங்குகொண்ட முக்கிய நாடாகும். இவ்விரு யுத்தங்களினால் இலட்சக்கணக்கான போர்வீரர்களும், பொதுமக்களும் போரிலும், போர் விளைவாலும் இறந்துள்ளனர். 60 இலட்சம் யூத மக்கள் (Holucast) நாசிகளால் கொல்லப்பட்டனர். இயற்கை

பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, அதன் அடிப்படையிலேயே ஐக்கியத்துக்கு உடன்பட வேண்டும். ஜேர்மன் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை இருப்பதை மறுக்க முடியாது. எனினும், அவர்களது ஐக்கிய முயற்சி பிற நாடுகளுக்குப் புதிய பிரச்சினையைத் தோற்றுவிக்கக் கூடாது. ஜேர்மனியின் ஐக்கியத்தை ஏனைய நாடுகள் ஏற்றுக்கொண்ட பின்னரே ஐக்கிய செயற்பாடுகள் தொடரவேண்டும். ஜேர்மன் ஐக்கியம் ஏனைய நாடுகளுக்கும் சந்தேகங்களைக் களைவது மூக்கியமாகும்.

---

# தந்திக்கம்பித் திருடர்கள்

## மக்கள் மடல்

ஆசிரியர்,

'ஈழநாதம்'

தொலைபேசிக் கம்பிகளை வெட்டும் சமூக விரோத வேலைகள் அடிக்கடி எமது பகுதியில் நடைபெற்று வருவதால் கொழும்பு மற்றும் தூர இடங்களுக்கு யாழ்ப்பாண பகுதியில் இருந்து தொலைபேசியில் பேசமுடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

அண்மையில் சிலர் கையும் மெய்யுமாக இந்த சமூக விரோத வேலையில் ஈடுபட்டபோது பிடிபட்டனர். இவர்களுக்குப் பின்னணியில் சிலர் இருந்து இதனைச் செய்விப்பதாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இந்த செப்புக் கம்பிகளை இங்குள்ள பழைய இரும்பு வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு கொழும்புக்கு அனுப்புகிறார்கள். கிலோ 50 ரூபாவுக்கு வாங்குகின்றனர்.

அண்மையில் பாக்குநீரணையில் பிடிபட்ட கடத்தல் படகு ஒன்றிலும் பல லட்சம் ரூபா பெறுமதியான செப்புக் கம்பிகள் இவ்வாறு களவாடிக் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எமது பகுதியில் கடந்த காலங்களில் தொலைத் தொடர்புகள் பாதிக்கப்பட்டதால் மக்கள் அவசர தொலைபேசி அழைப்புக்காக வவுனியா வரை சென்று அலைய வேண்டிய கஷ்ட நிலை இருந்தது. மீண்டும் அப்படியான நிலைமை ஏற்படுமா?

இந்த சமூக விரோத செயலில் ஈடுபடுபவர்களை இனம் கண்டு தகுந்த தண்டனை வழங்கப்பட்டாலே இத் திருட்டை ஒழிக்க முடியும். தொலைபேசிகளும் சீராக இயங்கும். இல்லையேல் இந்த வேலை தொடரும். மக்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

க. சந்திரன்

கோப்பாய்.

---

# கொத்தணி அதிபர்களுக்கு போக்குவரத்து படியில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை கொத்தணி அதிபர்கள் போக்குவரத்துப்படி இன்றி கடமை புரிவதாக புகார் தெரிவிக்கிறார்கள்.

மேற்படி அதிபர்களுக்கு மாதாந்தம் ரூபா 400 மேலதிக படியாக வழங்கப்பட்டு வந்தது.

கடந்த தைமாதம் முதல் இந்த மேலதிகரிப்பு வழங்கப்படாத நிலையில் கடமை புரிவதாக அவர்கள் ஈழநாதத்திற்கு தெரிவித்தனர்.

இவ்வருடம் இதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளது என கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

# மதிய உணவுத் திட்டத்திற்கு ரூபா 45 இலட்சம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் மதிய உணவுத் திட்டத்துக்கு இத்தாலி அரசாங்கம் ரூபா 45 இலட்சம் நிதி உதவி வழங்கவிருக்கிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடொன்றுக்கு இத்தாலி வழங்கவிருக்கும் மிகப் பெரிய நிதி உதவி இதுவாகும்.

ஏனவே குருநாகல் மாவட்டத்தில் மதிய உணவு வழங்கும் திட்டத்துக்கு இத்தாலி உதவி வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

தாகச் சொல்கிறார்கள்.

பௌத்த குருமார் சங்கத்திலிருந்து (சங்கசயா) நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட ஸ்ரீவியாசி தேரோ இந்தச்சபாவின் தலைமைப் பிக்குவுக்கு ஜப்பானிலிருந்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

மகாயன பௌத்தத்தைத் தாம் தழுவிக் கொண்டதற்குக் காரணம் ஏழைகளுக்குசேவை செய்வதற்காகவேயென்றும் இலங்கையில் ஏற்கனவே பல பிக்குகள் மகாயன பௌத்தத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறார்களென்றும் தமது கடிதத்தில் அந்த பிக்கு தெரிவித்திருக்கிறார்.

புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றி மக்களுக்கு சாந்தியையும் சமாதானத்தையும் அளிக்கும் பொறுப்பு பௌத்த குருமார்களின் கடமை.

இப்பொழுது இலங்கையில் புத்த பிரானின் போதனைகளை ஒழுங்காகப் பின்பற்றுகிறவர்கள், எத்தனை பௌத்த தர்மத்தைப் பின்பற்றி நடந்து கொள்கிறார்கள்?

சந்திக்குச் சந்தி புத்த பெருமானைச் சிலைகளாக்கி வைத்து பிக்குகள் சம்பாதிக்கப் புறப்பட்டார்களோ அன்றே நாட்டுக்குக் கேடு பிடித்தது என்று எனது சிங்கள பௌத்த நண்பன் ஒருவன் சில காலத்திற்கு முன் சொன்னது இப்போது நினைவு வருகிறது.

பௌத்தத்தில் தான் எத்தனை பிளவுகள்?

---

# முள்ளிக்குளத்தில் புலிக்கொடி

(முள்ளிக்குளம்)

புலிக் கொடிகளை ஏற்றி வைக்கும் வைபவம் முள்ளிக்குளம் புதுக்குடியிருப்பு பகுதியிலும் முள்ளிக்குளம் பகுதியிலும்கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இவ் வைபவத்திற்கு முள்ளிக்குளம் சிற்றூர் அவைத்தலைவர் திரு.ப. காணிக்கைநாதன் தலைமை வகித்தார்.

பிரதேசப் பொறுப்பாளர் திரு.ரமேஷ் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிஅமைப்பாளர்திரு.ரா.சாமுவேல்ராஜ் ஆகியோர் பங்குகொண்டு உரையாற்றினர்.

ஈழநாதம்

## வாழ்க்கைச் செலவை ஸ்திரப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவை நியாயமான அளவுக்கு ஸ்தர நிலைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அமைச்சர்களடங்கிய குழுவை நியமித்துள்ளார்.

பிரதமர் டீ. பி. விஜயதுங்கா தலைமையிலான இக் குழுவில் அமைச்சர்கள் அத்துலத்முதலி, ஏ. ஆர். மன்சூர், வீரசிங்க மல்லிமாராய்ச்சி, தர்மதாஸ பண்டா, ரூபா கருணாதிலகா ஆகியோரே ஏனைய அமைச்சர்களாவர்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரும் இதில் இடம் பெறுவார்.

உரம், சீனி, அரிசி, சீமேந்து என்பவற்றை பெருமளவு இறக்குமதி செய்து கொழும்புத்துறை முகத்தில் வைத்திருப்பது என்பது ஒரு சிபார்சாகும்.

பொருட்களின் விலைகள் குறைவாக உள்ளபோது முன் கூட்டியே பொருட் கொள்வனவு ஒப்பந்தம் செய்வது இரண்டாவது சிபார்சு.

சீனி, பருப்பு, பெரியவெங்காயம் என்பனவற்றின் மீது விதிக்கப்படும் மொத்த விற்பனை வரி, சுங்க வரி, வியாபார மொத்த விற்பன வரிஎன்பனவற்றை நீக்குதல் மூன்றாவது சிபார்சு.

அரிசி, சீனி, மா என்பவற்றின் இறக்குமதிக்கு அரசுக்கு இருக்கும் ஏகபோக உரிமையை நீக்குவது தனியார் மயமாக்குவது நான்காவது சிபார்சு.

இந்த நான்கு சிபார்சுகளைப் பற்றி ஆராய்ந்து இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இக் குழு தனது அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கும்.

# கனடாவிலிருந்து கடிதத்தில் யாழ்ப்பாணம் வந்தகாசோலைகொழும்பு வங்கியில்காசானது!

## வர்த்தகர் சிக்கியதால் தபால் ஊழியர்களின் மோசடி அம்பலம் வங்கிக்கணக்கின் மூலம் பணம்பெறுவதே சிறந்த வழி என புத்திமதி

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு வரும் கடிதங்கள் உரியவர்களுக்கு வந்து சேருவதில்லை என பொதுமக்கள் தெரிவித்த புகார்களையடுத்து யாழ்ப்பாணப்பகுதி தபால் ஊழியர்கள் சிலரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - பாண்டியன் தாழ்வுப் பகுதியில் உள்ள ஒருவருக்கு கனடாவில் இருந்து அனுப்பப்பட்ட ஒருதொகை பெறுமதியான காசோலையை கொழும்பிலுள்ள வங்கி ஒன்றில் மாற்றப்பட்டது தொடர்பான விசாரணைகளிலிருந்து இது தெரியவந்துள்ளது.

இந்தக்காசோலை ஒருவரின் வங்கிக் கணக்கில் போடப்பட்டு மாற்றப்பட்டது. அவர் கொழும்பு கோட்டை பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது அதனை யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர் ஒருவர் தமக்குத் தந்ததாக கூறினார்.

அந்த வர்த்தகர் கொழும்பு வந்தபோது பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தற்போது பிணையில் விடப்பட்டுள்ளார்.

இந்த வர்த்தகருக்கு யாழ்ப்பாணம் தபால் அலுவலகத்திலுள்ள ஊழியர் ஒருவரே மேற்படி காசோலையை வழங்கியுள்ளதாக அவர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்தான் கடிதங்கள் உடைக்கப்பட்டு வருகின்றன என்று இங்குள்ள தபால் ஊழியர்கள் பொதுமக்கள் கேட்டால் சொல்வதாகவும் ஆனால் மேற்படி சம்பவத்தையடுத்து உள்ளூரிலேயே உடைக்கப்படுவது தெரியவந்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

இதேபோல வெளிநாட்டுக் கடிதங்கள் தமக்குக் கிடைக்கவில்லை என்று பொதுமக்களில் பலர் தினமும் யாழ்ப்பாணம் பிரதம தபால் அதிபரிடம் புகார்கள் தெரிவித்து வருகின்றனர்.

தீவுப் பகுதியிலுள்ள ஒருவருக்கும் வந்த வெளிநாட்டு கடிதத்தினுள் உண்மையான காசோலை எடுக்கப்பட்டு போட்டஸ்ரற் காசோலை இருந்ததாம்.

வவுனியாவில் சில நாட்களுக்கு முன்னர் சில வெளிநாட்டுக் கடிதங்கள் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு விசாரணையும் நடைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டிலிருந்து இங்குள்ள உறவினர்களுக்கு பணம் அனுப்புபவர்கள் வங்கிக் கணக்கின் பெயருக்கு காசோலை அனுப்பினால் இவ்வாறான கையாடல்கள் நடைபெறாது தடுக்கமுடியும் என்றும் பொதுமக்கள் இதற்கு ஒத்துழைக்கவேண்டும் எனவும் அந்த அதிகாரி சொன்னார்.

## பரந்தன் இரசா. தொழிற்சாலை ஊழியர்களுக்குசம்பள அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

பரந்தன்இரசாயனத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிகரித்த சம்பளம் நிலுவையுடன் அடுத்தமாதச் சம்பளத்துடன் வழங்கப்படும் என்று இரசாயனக் கூட்டுத்தாபனத்த லைவர் திரு. உபாலி த சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1984 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலை மூடப்பட்டமையினால் 1986, 1988 ஆம் ஆண்டுகளில் அரச திணைக்களக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு அமுல் செய்யப்பட்ட புதிய சம்பள மீளாய்வு அமுல் செய்யப்படவில்லை.

மேற்படி புதியசம்பள மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் இவ்வூழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பை அமுல்செய்ய ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

தற்போது 71/2 இலட்சம் ரூபா சம்பளமாக வழங்கப்படுகின்றது. இத்தொகையானது சுமார் 11 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கும் இவ்வாறு தெரிவித்தார். (37)

## ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் பல வசதியீனங்கள்

(தீவுப்பகுதி)

வேலணைப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலை எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வருகின்றது.

இங்கு நோயாளர்களைப் பார்வையிடும் போது ஒரு மறைவிடமின்மையால் மக்கள் முன்னிலையிலே பார்வையிடப்படுகிறது.

மேலும் இங்கு நோயாளர்களைப் பரிசோதிப்பதற்கு கட்டில் வசதிகள் இல்லை மின்சார, சுகாதர வசதிகள் இங்கு இல்லை.

போதிய உபகரணங்கள், மின் விசிறிகள் நோயளர்கள் இருப்பதற்கேற்ப நல்ல ஆசனங்கள் கூட இல்லா திருக்கின்றது.

இவ் வைத்திய சாலைக்கு நல்ல திறமையுள்ள சிறந்த வைத்திய அதிகாரி இருந்தும் கூட மேற்படி குறைபாட்டினால் மக்களுக்கு மேலும் திருப்தியன சேவையை அளிக்க முடியதுள்ளது. (15(

## யாழ். வியாபார நிலையங்களில் போலிப் பற்றுச்சீட்டுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலும் ஏனைய இடங்களிலும் அமைந்துள்ள பல வியாபார ஸ்தாபனங்கள் தமது பெயர், முகவரி அற்ற பற்றுச் சீட்டுக்களையே வழங்கி வருகின்றன. பொறுப்பற்ற இச் செயலால் பொது மக்களே பல வழிகளிலும் பாதிக்கப்படுகின்றனர். பெயர் குறிப்பிடாத பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் சட்ட விரோதமான செயல் என பிரதி உள்நாட்டு வியாபார ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரிலும் பல ஸ்தாபனங்களில் இவ்வாறான பற்றுச் சீட்டுகள் வழங்கப்படுவதாகவும், அதுசம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இப்பற்றுச் சீட்டுகள் விடயமாக பொது மக்கள் அவதானமாக இருக்குமாறும் அவர் தெரிவித்தார். (மு)

## தனியார் கல்வி நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிறுவனங்களும் பிரத்தியேக வகுப்புகளும், எதிர் வரும் 23-5-90 இற்கு முன்னர் கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைக்காரியாலயத்தில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். இப்பதிவுகளை காலை 9 மணி தொடங்கி 12 மணி வரையும் பிற்பகல் 2-30 மணி தொடங்கி 3-30 மணிவரையும் செய்து கொள்ளலாம் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அலுவலகம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## உருவச்சிலை திரை நீக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஸ்தாபகரும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த வருமான வண. பேர்டினன்ஸ் பொனல் அடிகளார் உருவச்சிலை தேசியவீரர் தினமாகிய இம்மாதம் 22 ஆம் திகதி திரை நீக்ம் செய்யப்படும்-

கல்லூரி வளவில் அமையவுள்ள இச்சிலையை பழைய மாணவர் மன்றம் நிறுவ முன்வந்துள்ளது. (37)

## தமிழீழத்தின் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு

'தமிழீழத்தின் அபிவிருத்தியும் திட்டமிடலும்' என்னும் தலைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் முன்னைநாள் உறுப்பினரான பேராசிரியர் சூரியகுமாரன் தமிழீழ ஆய்வு அரங்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றினார். இக்கலந்துரையாடலின்போது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் விவசாய அபிவிருத்தி, அதன்செயலாக்கம், கிராமியஅபிவிருத்தி

## வாக்கு மூலம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. சாம் தம்பிமுத்துவும், திருமதி.கலா தம்பிமுத்துவும் கடந்த ஏழாந் திகதி சென்றபோது தூதரக வாயிலில் மோட்டார் சைக்கிலில் வந்தஇனந்தெரியாத இரு

## விலைவாசி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஆந்திரப் புயலினால் இறப்பு 500 பேருக்கு மேல் பாதிப்பு $6\frac{1}{2}$ லட்சத்திற்கு மேல்

(புதுடில்லி)

ஆந்திர மாநிலத்திலே புயலினாலே இறப்தோரின் எண்

ரண நிதியத்திலிருந்து, முதல் தவணையாக முப்பத்திரண்டு கோடியே இருபது இலட்சம்

இது தெரியவந்துள்ளது.

இந்தக்காசோலை ஒருவரின் வங்கிக் கணக்கில் போடப் பட்டு மாற்றப்பட்டது. அவர் கொழும்பு கோட்டை பொலிஸ் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டபோது அதனை யாழ்ப்பாணத்திலுள்ள வர்த் தகர் ஒருவர் தமக்குத் தந்த தாக கூறினார்.

### வாக்கு மூலம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. சாம் தம்பிமுத்துவும், திருமதி.கலா தம்பிமுத்துவும் கடந்த ஏழாந் திகதி சென்றபோது தூதரக வாயிலில் மோட்டார் சைக்கி ளில் வந்தஇனந்தெரியாத இரு வரால் சாம் தம்பிமுத்து சுட் டுக் கொல்லப்பட்டதும் திரு மதிகலா படுகாயமடைந்ததும் தெரிந்ததே!

### புலிகளோடு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் என பொலிஸார் எச்சரி த்துள்ளனர்.

இலங்கைக்கு எந்த அனுமதி யும் பெறாமல் சென்றவர்கள் மீது தமிழக அரசு எந்த நடவ டிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் மீனவர்களது கடற் தொழிலுக்கு மட்டும் அரசு தடைவிதித்துள்ளது. ஆயினும் நாங்கள் இலங்கை சென்று, புலிகளுடன் பேசுவதில்மாற்ற மில்லையென திரு. அருளா நந்தன் கூறினார்.

### சிற்றூழியர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை.

அதே நேரம் ஜனாதிபதி யின் பணிப்புரையின் பிரகா ரம் 6 மாத கால தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப் பட்டனர். ஆனால் 5 வரு டம் அமைய ஊழியர்களாக கடமையாற்றிய மேற்படி மூவருக்கும் எவ்வித விமோ சனமும் கிடைக்கவில்லை என்றும் புகார் தெரிவித்த னர். (37)

### கானடா சென்றும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ததையடுத்து செல்வ குமார் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இவரைப் பற்றியும், இக் கொலை தொடர்பாகவும் கனேடியப் பொலிஸார் இலங் கைப் பொலிஸாரிடம் விப ரங்களைக் கோரியுள்ளனர்.

சாலை எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வருகின்றது.

இங்கு நோயாளர்களைப் பார்வையிடும் போது ஒரு மறைவிடமின்மையால் மக் கள் முன்னிலையிலே பார்வை யிடப்படுகிறது.

மேலும் இங்கு நோயாளர் களைப் பரிசோதிப்பதற்கு கட்டில் வசதிகள் இல்லை மின்சார, சுகாதர வசதிகள் இங்கு இல்லை.

போதிய உபகரணங்கள், மின் விசிறிகள் நோயளர்கள் இருப்பதற்கேற்ப நல்ல ஆசன ங்கள் கூட இல்லா திருக்கின் றது.

### விலைவாசி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இது தொடர்பாக பொதுமக்கள் எல்லோரும் அறியக் கூடியதாக வரிவிதிக் கப்பட்ட பொருட்கள், வரிவி திக்கப்படாத பொருட்கள் என வேறு படுத்தி வரிவிதிக் கின்ற பொருட்கள், சிவப்பு எழுத்துக்களாலும், உண்மை யான விலையும், வரியினால் உண்டாக்கப்பட்ட விலையும் எழுதப்பட்டு விலைப்பட்டியல் தொங்க விடப்பட வேண்டும்.

அத்தியாவசிய பொருட்க ளுக்கு வரிவிதிப்பு இல்லை. ஆனால் மறைமுகமாக எமது பெயரைப் பயன்படுத்தி அத் தியாவசியப் பொருட்களின் விலைகளும் கூட்டி விற்கப்படு கின்றது.

பொருட்கள் நியமயமான விலைக்கு விற்கப்பட வேண் டும். இறக்குமதிப் பொருட் களின் விலை, கொழும்பு விலை அதிகரிக்கப்படுமாயின் எமது அனுமதியைப் பெற்றே யாழ். மாவட்டத்தில் விலை அதிகரிப்பு செய்யப்பட வேண் டும். மேலும் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணம் பொது மக்களுக்குத் தெரிவிக் கப்பட வேண்டும்.

வர்த்தகர்களிடமிருந்து லாபத்தில் ஒரு பகுதியையே போர்நிதியாகப் பெறப் படுகின்றது. ஆனால் அந்நிதி பொதுமக்களிடம் இருந்து அத்தியாவசிய பொருட்களின் மேல் வரி சுமத்தி எமக்கு அவப்பெயர் ஏற்படுத்துகின் றது.

முக்கியமாக எமதுபோராட் டத்திற்கு நிதி தேவை அந் நிதியை பொதுமக்கள் தருவ தற்கு சந்தோசப்படுகிறார்கள் ஆனால் வர்த்தகர்களின் மேலதிக சுரண்டல் நடவடிக் கையை மக்கள் வெறுக்கிறார் கள்' இது தொடர்பாக நாமும் வேதனையடைகின் றோம் என்றும் தெரிவித் தார்.

திருப்தியண சேவையை அளிக்க முடியதுள்ளது. (15(

## உருவச்சிலை திரை நீக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனித மிக் கேல் கல்லூரி ஸ்தாபகரும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த வருமான வண. பேர்டினன்ஸ் பொனல் அடிகளார் உருவச் சிலை தேசியவீரர் தினமாகிய இம்மாதம் 22 ஆம் திகதி திரை நீக்ம் செய்யப்படும்-

கல்லூரி வளவில் அமைய வுள்ள இச்சிலையை பழைய மாணவர் மன்றம் நிறுவ முன்வந்துள்ளது. (37)

### பாராளுமன்றம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுமென்ற பிரேரணை விவா தத்துக்கு எடுத்துக் கொள்ளப் படவிருக்கிறது.

இதே சமயம் பாராளுமன்றக் கட்டிடத்திற் குள்பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவை ஈ.பி.ஆர். எல்.எவ். எம்பிகளில் ஐவர் கொண்ட குழு இன்று காலை சந்தித்துப் பேச விருக்கிறது.

### பொலிஸ்

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ராஜா தலைமையிலான குழு வே இங்கு செல்கிறது.

இன்ஸ்பெக்டர் செல்வ ராஜா புலோலியைச் சேர்ந் தவர்,

### பட்டப்பகலில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை துரைரசாஎன் பவரின் வீட்டிலேயே இச்சம்ப வம் நடந்தது.

களவில் ஈடுபட்டவரைத் தேடும் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

### ஆயுதம் தாங்கிய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும், இக் காவல் நிலையங்கள் திருட்டுப் பொருட்கள், கள்ளமரம் போன்றவற்றையும், சந் தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத் துவதற்குமே எனவும்தெரிவித் தார். (தி)

### ஈ. பி. ஆர்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியோகபூர்வமாக பேச்சு நடத்த சிங்கள அரசு முடிவு செய்திருப்பது எமக்கு பெரும் அதிருப்தியையும் கவலையை யும் கொடுத்திருக்கிறது. இவ் வாறு புலிகள் இயக்கப் பேச் சாளர் ஒருவர் குறிப்பிட்டார்

பற்றுச் சீட்டுக்களையே வழங்கி வருகின்றன. பொறுப் பற்ற இச் செயலால் பொது மக்களே பல வழிகளிலும் பாதிக்கப்படுகின்றனர். பெயர் குறிப்பிடாத பற்றுச்சீட்டுக் களை வழங்குதல் சட்ட விரோதமான செயல் என றுச் சீட்டுகள் வழங்கப்படுவ தாகவும், அதுசம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் இப்பற்றுச் சீட்டுகள் விடயமாக பொது மக்கள் அவதானமாக இருக்கு மாறும் அவர் தெரிவித்தார். (மு)

## தமிழீழத்தின் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு

'தமிழீழத்தின் அபிவிருத்தி யும் திட்டமிடலும்' என்னும் தலைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் முன்னைநாள் உறுப்பினரான பேராசிரியர் சூரியகுமாரன் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் கைலாசபதி அரங்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று ஒழுங்குசெய் யப்பட்ட கருத்தரங்கில் உரை யாற்றினார். இக்கலந்துரை யாடலின்போது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் விவ சாய அபிவிருத்தி, அதன்செய லாக்கம், கிராமியஅபிவிருத்தி அதற்கான வேலைத்திட்டம் குடிசைக் கைத்தொழில் என் பனவற்றிற்கு அழுத்தம்கொடு த்துப் பேசினார். இரசாயன தொழிற்சாலைகள், விவசாய கைத்தொழில்கள், சீமேந்துத் தொழிற்சாலை ஆகியவற்றின் கூடிய அளவிலான அவசியத் தையும் வலியுறுத்தினார். பொருளாதார அபிவிருத்தி யில் வீதிகளின் முக்கியத்துவத் தையும் எடுத்துக் கூறினார்.

### வட-கிழக்கு-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண இணைப்புக்கு குழு முதல் தடவையாக அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி மட்டக்களப்பில் நடை பெறவிருக்கிறது. இதற்கு முன்னோடியாக ஜுன் மாதம் எட்டாந் தேதி வடக்கு- கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட அரசாங்க அதிபர் களின் மாநாடு நடைபெற விருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங் களி புனரமைப்பு அபிவிருத்தி பற்றி இம் மாநாடுகளில் ஆராயப்படவிருக்கிறது.

### உள்ளூராட்சி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம் ரூபா வாக இருப்பதை இட்டு தாம் மிக மனவருத்தம் அடைவதாக அவர் தெரிவித் தார். மாகாண சபையால் திட்டமிட்டதிலும் பார்க்க அதிகரித்த நிதியை விரையில் பெற்று கொள்வது சம்பந்த மாக எமது அதிகாரிகளால் பலமுறை திருக்கோணமலைக் கும் கொழும்புக்கும் வேண்டு தல்கள் விடுக்கப்பட்டும் எது வித முயற்சிகளும் எடுக்கப் படவில்லை. எனவும் அவர் தெரிவித்தார்.

இருந்தும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் எமக்கு உதவிகள் வழங்கும் அதே வேளை தமது நலனுக் கேற்றவாறு எம்மை ஆட்டி வைக்க நினைப்பது வெறுக்கத் தக்கதாகும். கனடாவினால் எமகு அளிக்கப்பட்ட உதவி குறிப்பிட்ட காலத்துக்குள் வேலை அனைத்தும் முடிக்கப் பட வேண்டும் எனவும் தம் மால் வழங்கப்படும் நிதிக்கு கனேடிய உபகரணங்களே கொள்வனவு செய்யப்பட வேண்டும். என்பதெல்லாம் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் அவர் தெரிவித்தார். (லோ)

### ஊழியர்கள் வேலை நிறுத்தில் ஈடுபடவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு டிப்போ ஊழியர்கள் சம்பளம் வழங்கப் படாமையினால் வேதனம் கோரி திடீர் வேலை நிறுத்தம் செய்தார்கள் என வெளிவந்த செய்தியை மட்டக்களப்பு போக்குவரத்துச் சபை முகா மையாளர் மறுத்துள்ளார். ஊழியர்கள் அவ்வாறு ஒரு போதும் வேலை நிறுத்தத் தில் ஈடுபட்ட வில்லை என அவர் தெரிவித்தார்.

### சுயதொழிலில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்கள் எமக்கு தாம் பெறும் கடனுக்கு பிணையாக ஆட்க ளையோ அன்றி ஆதனங்க ளையோ காட்ட முடியாத நிலையில் உள்ளனர் இவர்க ளுக்கு எம்மத்தியில் உள்ள பொதுஸ்தாபனங்கள் முன் வந்து இக்கடன் வசதிகளை முயற்சி உடைய இளைஞர் களுக்கு பெற்று கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

மேலும் இலங்கை வங்கி மூலம் சிறிய நடுத்தர கைத் தொழில் கடன் வசதியும் பாதிக்கப்பட்ட உடமைகளை புனரமைப்பு செய்தவற்கான கடன் வசதிகளும் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (லோ)

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிறுவ ளங்களும் பிரத்தியேக வகுப் புகளும், எதிர் வரும் 23-5-90 இற்கு முன்னர் கோண்டாவி லிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலை மைக்காரியாலயத்தில் அமைந் துள்ள தனியார் கல்வி நிறு வன ஒன்றியத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண் டும். இப்பதிவுகளை காலை 9 மணி தொடங்கி 12 மணி வரையும் பிற்பகல் 2-30 மண தொடங்கி 3-30 மணிவரை யும் செய்து கொள்ளலாம் என விடுதலைப் புலிகள் மக் கள் முன்னணி யாழ். மாவ ட்ட அலுவலகம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித் துள்ளது.

## ஆந்திரப் புயலினால் இறப்பு 500 பேருக்கு மேல் பாதிப்பு $6\frac{1}{2}$ லட்சத்திற்கு மேல்

(புதுடில்லி)

ஆந்திர மாநிலத்திலே புய லினாலே இறப்தோரின் எண் ணிக்கை ஐந்நூற்றைத் தாண்டி விட்டது. சுமார் ஆறரை இலட்சம் மக்களைப் புயல் பாதித்துள்ளது. ஏறத் தாள மூன்று இலட்சம் ஹெக் டேக்கர்நிலப்பரப்பில் விளைந் திருந்த நெல், கரும்பு, நிலக் கடலை ஆகிய பயிர்கள் பாழாகி விட்டன.

இயற்கை இன்னல் நிவா ரண நிதியத்திலிருந்து, முதல் தவணையாக முப்பத்திரண்டு கோடியே இருபது இலட்சம் ரூபாயை ஆந்திர அரசுக்கு மத்திய அரசு கொடுத்துள் ளது. ஒன்பதாவது நிதிக் கொமிஷன் விடுத்துள்ள பரிந் துரையின் அடிப்படையில் ஆந்திரப் பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 86 கோடி ரூபாயில் முக்கால் பங்குத் திட்ட செலவு அல்லாத மானியமாக வழங்கப்படடும்.

## கிழக்கு பல்கலை மாணவர் அனுமதியின்றி சுற்றுலா

பல்கலைக்கழக நிர்வாக அனுமதியின்றி கிழக்கு பல் கலைக்கழக மாணவ, மாணவி கள் குழுவென்று கொழும் புக்கு சுற்றுலா மேற்கொண் டுள்ளது.

மேற்படி சுற்றுலா தொடர் பாக சம்பந்தப்பட்ட மாண வர்கள் மீது ஒழுங்கு நடவ டிக்கை எடுக்கப்படுமென பல் கலைக்கழவட்டாரங்கள் தெரி வித்தன. (37

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம், யாழ்.
மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தும்
அகிலன் - திருச்செல்வம்
ஞாபகார்த்த

## கவிதைப் போட்டி

**போட்டி விதிமுறைகள்**

(1) யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் பங்குபற்றலாம்.

(2) கவிதையாளர் பாடசாலை மாணவர் என அந்தந் தப் பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப் பட வேண்டும்.

(3) கவிதைகள் சமகால நிகழ்வுகளை பிரதிபலிப்பவை களாக இருத்தல் வேண்டும்.

**போட்டி முடிவு திகதி:- 28-5-1990**

கவிதைகள் யாவும் போட்டி முடிவு திகதிக்கு முன்னதாக அந்தப் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**பரிசு விபரங்கள்:**

1 வது பரிசு - 500 ரூபா
2 வது பரிசு - 300 ரூபா
3 வது பரிசு - 100 ரூபா

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக் கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.